Australia: $2.50 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.15.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.50.00 Switzerland: Fr.1.50 United Kingdom: £1.20

SOUTH HARROW FOOD & WINES
TEL: 020 8423 6321
£1.20

NAZHIKAI
London

JUNE 2013

# நாழிகை

International Tamil Newsmagazine



ரி. எம் சௌந்தரராஜன்

திரைக் குரலின்
யுக நாயகன்


BRAND
Niru
Quality you can taste
FROZEN CURRIES
4 பேருக்கு போதுமான
நண்டுக்கறி-£4.99
விளைமீன் கறி-£3.49
Niru
Ready to Cook
FROZEN
Emperor Curry
SPECIAL PRICE
£3.49
FAMILY PACK
800g e
Easy To Cook.
Ready in 15 mins!
100 % NATURAL
NO PRESERVATIVES
Niru
Ready to Cook
FROZEN
Mackerel Curry
SPECIAL PRICE
£2.49
400g e
Niru
Ready to Cook
FROZEN
Crab Curry
SPECIAL PRICE
£4.99
FAMILY PACK
800g e
Fantastic Taste......
TRY IT TODAY.
Microwave
தேவையில்லை
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# SURYAA New Improved Taste!

Special packs
**900g Curry Powder**
with
**1 kg Flour**







**Hurry ! Limited Packs Only**

**Only £3.99**




**Great Offer** for a **Great New Taste!**


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers & Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909


10 | இலங்கை
13 இன் துரதிருஷ்டம்

12 | பாகிஸ்தான்
இந்தோ - பாக்.
உறவில் திருப்பம்?

14 | இலங்கை
அடையாளத்தை
பேணுவதில் ஏற்படும்
அச்சம்



40 | அட்டை செய்தி
ரி. எம். சௌந்தரராஜன்
திரைக் குரலின்
யுக நாயகன்



18 | சிறப்பு கட்டுரை
மா. கிருஷ்ணன்
காலத்தை வென்ற
ஒரு மனிதன்

34 | சிறுகதை
ஒப்பந்தம்


36 | விளையாட்டு
ஐ. பி. எல்.
களங்கம்

44 | சினிமா
மூன்று திரைப்படங்கள்

26 | கலை
லால்குடி ஜி. ஜெயராமன்
ஒரு பொற்காலத்தின்
மன்னர்



அட்டைப் படம்: ‘கலைமாமணி’ யோகா




**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: VIII, No: 3
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews Limited 123 Twyford Road Harrow Middx HA2 0SJ
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 728 2334 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com
www.nazhikai.com

**Anual Subscription** (12 issues): **UK** £22.00 **Europe** £30.00 **Canada** $30.00 **India** Rs200.00 **All Other Countries** £35.00
Payable to **Pannews Limited**
**Canada:** 880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6 **Tel: 416 613 2770**

# எங்கே செல்கிறது?

பிரிவினைகோரி, உலகின் அதி மூர்க்க மான தீவிரவாத இயக்கமாக இலங்கையில் உருவெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அவர்கள் பிரிவினை கோரிய பிரதேசத்தில் தங்களுடைய ஓர் 'ஆட்சியையும்' அமைத்திருந்த வேளையில், நாட்டை பிரிவினையிலிருந்து காப்பாற்றும் ஒரு நடவடிக்கையாக, பிராந்திய வல்லரசாகவும் அண்டை நாடாகவும் விளங்கும் இந்தியாவின் அநுசரணையுடன் மேற்கொண்ட ஒப்பந்தந்தின் அடிப்படையில், இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மேற்கொள்ளப்பட்டது. பிரிவினை கோரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து, அவற்றுக்கு சில அதிகாரங்களை யும் வழங்க இத் திருத்தச் சட்டம் வழிசமைத்தது.

சுதந்திரத்துக்குப் பின்னர் சுமார் முப்பது ஆண்டுகள், தங்கள் உரிமைகளுக்காக, நாட்டின் சிறுபான்மை இனத்தவரான தமிழர்கள் மேற்கொண்ட சமாதான முயற்சிகளின் விரக்தியில், இளைஞர்களின் இத் தீவிரவாதம் இலங்கையில் ஆரம்பித்தது.

பிரிவினைக்கான கோரிக்கைக்கு முக்கிய தூண்டுதலாக, ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொண்ட சிங்கள குடியேற்றங்கள் அமைந்தன.

ஆக, இலங்கையில் ஒரு தீவிரவாத இயக்கம் உருவாவதற்கும், அதனால் ஏற்பட்ட அநர்த்தங்களுக்கும் அங்கு ஆட்சியிலிருந்த அரசாங்கங்களே பொறுப்பு என்பது யதார்த்தமானது.

இப்பொழுது, இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லை.

பிரிவினையைத் தடுப்பதற்காக,13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் தமிழர் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்களை 'பிரிவினை' என்றும், விடுதலைப் புலிகள் 'பயங்கரவாதிகள்' என்றும் 'கோஷம்' எழுப்பி, ஆட்சியிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், அத் திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களைக் குறைக்கும் திருத்த நடவடிக்கைகளில் தீவிரமடைகிறது.

ஆக, நோயைத் தணிக்க பரிந்துரைத்த மருந்து, வலுவிழக்கச் செய்யப்படுகிறது. நோய் குணமடையுமா?

இலங்கை எங்கே செல்கிறது?

மக்கள் எதிர்காலம் எப்படியோ, ஆனால் அரசியல்வாதிகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. ■

# உலகம்



பிரிட்டன்

## 60 ஆண்டு ஆராதனை

எலிஸபெத் மகாராணி முடிசூடிய 60 ஆண்டுகள் நிறைவு ஆராதனை வெஸ்ற்மின்ஸ்ரர் அபே தேவாலயத்தில் நடைபெற்றது. அழைக்கப்பட்டிருந்த இரண்டாயிரம் விருந்தினர்களில், மகாராணியின் முடிசூட்டு விழாவில் கலந்துகொண்டவர்களும் சிலர் இருந்தனர். 92 வயதாகும் இளவரசர் பிலிப்பும் கலந்துகொண்டார்.

1953இல் சூட்டப்பட்ட தங்க முடி, அது பேணப்படும் 'ரவர் ஒவ் லண்டனி'லிருந்து முதன்முதலாக அங்கிருந்து எடுத்துவரப்பட்டு, ஆராதனையின்போது வைக்கப்பட்டிருந்தது. பிரிட்டனின் மிகப் பழைமையான தளபாடங்களில் ஒன்றாக பெருமைபெறும் சிம்மாசனமும் அங்கு வைக்கப்பட்டிருந்தது.

1066இல் மாவீரன் வில்லியம் முடிசூடியதிலிருந்து, வெஸ்ற்மின்ஸ்ரர் அபேயில் நடைபெற்ற 38ஆவது முடிசூட்டுவைபவம் இரண்டாம் எலிஸபேத் மகாராணியுடையது. தன்னுடைய 27ஆவது வயதில் அவர் முடிசூடினார்.

முடிசூட்டலின்போது பிரதமர் வின்சன் சேர்ச்சில் அமர்ந்திருந்த ஆசனத்தில் பிரதமர் டேவின் கமரோன் அமர்ந்திருந்தார்.




பிரிட்டன்

## நாடு திரும்பாத வெளிநாட்டு மாணவர்கள்

பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டு மாணவர்கள், படிப்பு முடிந்ததும் தமது சொந்த நாடுகளுக்கு திரும்புவதில்லை என்று உள்நாட்டு செயலாளர் தெரேசா மே தெரிவித்திருக்கிறார்.

2009ஆம் ஆண்டில் இங்கு நிரந்தரமாக தங்க அநுமதி வழங்கப்பட்ட 23 ஆயிரம் பேர் மாணவர்களாக இங்கு வந்தவர்கள் என்று தெரிவித்த அவர், அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இதே எண்ணிக்கையினர் அநுமதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

மாணவர்களுக்கு வீசா கட்டுப்பாடுகளை தளர்த்த விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



சிரியா

## ஆயுத விநியோக தடை நீக்கம்

சிரியாவின் புரட்சி குழுவுக்கு ஆயுதங்கள் வழங்க ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த தடையை நீடிப்பதற்கு, அங்கத்துவ நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இணக்கப்பாட்டை எட்டத் தவறியதைத் தொடர்ந்து, ஆயுத விநியோகத்துக்கான தடையை ஒன்றியம் விலக்கிக்கொண்டுள்ளது.

சிரிய அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் விடுத்திருக்கும் மிகக் கடுமையான எச்சரிகை இதுவென்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு இத் தடைநீக்கம் தொடர்பில் கருத்து தெரிவித்திருக்கிறது. ஆயுத தடை நீக்கத்தைத் தொடர்ந்து, சிரிய அதிபர் பஷார் அல் அசாத்துக்கு எதிராக போராடிவரும் குழுவினருக்கு ஆயுதங்கள் வழங்குவதை பிரிட்டனும் பிரான்சும் தீவிரப்படுத்திவருகின்றன.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது அல்ல என்று தெரிவித்துள்ள ஒஸ்ரியா, ஐரோப்பிய ஒன்றியம் அமைதியை நிலைநாட்டுவதற்கான அமைப்பு என்பதற்கு பதிலாக, போரை ஊக்குவிக்கும் அமைப்பு என்ற ஓர் எண்ணத்தை இதன்மூலம் தோற்றுவிக்கும் என்றும் தெரிவித்துள்ளது.





பிரிட்டன்

## இஸ்லாமிய தீவிரவாதம்

பிரிட்டனில் இஸ்லாமிய தீவிரவாதத்தை முறியடிப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு விசேஷ குழு ஒன்று அமைக்கப்படுகிறது. அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுபவர்கள், ஏற்கனவே புலனாய்வு பிரிவினரால் அறியப்பட்டிருந்தும் அவர்களைக் கண்காணிக்க தவறியமைக்கான காரணங்களை கண்டறிவதோடு, இஸ்லாமிய இளைஞர்கள் மத்தியில் ஊட்டப்பட்டுவரும் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கான ஏதுக்களைக் கண்டறிவதிலும் இந்த விசேஷ குழு ஈடுபடும்.

சிரேஷ்ட அமைச்சர்கள், பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய இக் குழு, தீவிரவாதத்தைப் போதிப்பவர்களுக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பரிந்துரைக்கும்.

அண்மையில், லண்டன் வீதி ஒன்றில் இராணுவ வீரர் ஒருவர் பகிரங்கமாக கொலைசெய்யப்பட்டபோது, கொலையாளி ஏற்கனவே புலனாய்வுப் பிரிவினரால் அறியப்பட்டவர் என்பது தெரியவந்தது.

இஸ்லாமிய தீவிரவாதத்தை தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதமர் டேவிட் கமரோன் தவறிவிட்டதாக புகார்கள் எழுந்தவேளையில், இந்த விசேஷ குழு அமைக்கப்பட்டுள்ளது.



சிம்பாப்வே

## தேர்தலுக்கு நீதிமன்றம் உத்தரவு

சிப்பாப்வேயின் ஜனாதிபதி தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் ஜூலை 30ஆம் தேதிக்கு முன்னதாக நடைபெறவேண்டும் என்று சிம்பாப்வே அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தேர்தல்களுக்கான தேதியை அதிபர் றொபர்ட் முகாபே அறிவிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடைசியாக நடைபெற்ற தேர்தலின்போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அதிபர் முகாபேயுடன் உடன்பாடு ஒன்றை மேற்கொண்டு பிரதமர் பதவியை வகித்துவரும் மோர்கன் சங்கர்ராய் தலைமையிலான அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வழக்கறிஞர் குழுவொன்று அரசியலமைப்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

நீதிமன்றம் விதித்த கால எல்லையுள் தேர்தலை நடத்துவது சாத்தியமானதல்ல என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.



சுவிற்சர்லாந்து

## வெளிநாட்டவர்களுக்கு கட்டுப்பாடு

வெளிநாட்டவர் குடியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேலும் பல இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இம் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் புதிய நடவடிக்கைகளில், ஐரோப்பிய ஒன்றியத்தில் புதிதாக இணைந்துகொண்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறுவது மட்டுப்படுத்தப்படும்.

சுவிஸ் நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை, நாட்டின் மக்கள் தொகையில் கால் பங்காகும் நிலையில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அண்மைக் காலமாக மிக அதிக எண்ணிக்கையில் குடியேறிவருவதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் சுவிற்சர்லாந்து அங்கம் வகிக்காதபோதும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலிருந்து பெருமளவினர் இங்கு குடியேறுவதாக தெரிவிக்கப்படுகிறது.



எகிப்து

## சூயெஸ் கால்வாயில் போக்குவரத்துக்கு தடை?

உலகின் மிக நீளமான நதியான நைல் நதியின் குறுக்கே எதியோப்பியா அணை கட்ட முயற்சிகளை மேற்கொண்டுவருவதை ஆட்சேபித்து, சூயெஸ் கால்வாய் வழியே போக்குவரத்தைத் தடைசெய்வதற்கு எகிப்து முடிவு செய்துள்ளது.

வட கிழக்கு ஆபிரிக்காவில் பதினொரு நாடுகளை ஊடறுத்து பாயும் நைல் நதியில் அணை ஒன்றை அமைத்து, தனது நாட்டின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய திட்டமிட்ட எதியோப்பியா, சீனாவின் உதவியோடு அணை ஒன்றை அமைத்து, நைல் நதியின் போக்கை திசை திருப்பவும் நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது.

இத் திட்டத்துக்கு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் எகிப்து, தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் சூயெஸ் கால்வாய் வழியான போக்குவரத்தை தடைசெய்ய தீர்மானித்துள்ளது.



அமெரிக்கா

## 'தெஸ்லா'வின் குறைந்த விலை மின் கார்

மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களைத் தயாரிக்கும் முன்னணி நிறுவனம் என்ற பெருமையைக்கொண்ட அமெரிக்காவின் 'தெஸ்லா' நிறுவனம், நடுத்தர மற்றும் குறைந்த வருமானம்கொண்டவர்களுக்கான வாகனத்தைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

குறைந்த வருமானத்தை உடையவர்களும் வாங்கக்கூடிய வகையிலான விலையில் சந்தைப்படுத்தப்படவிருக்கும் இந்தப் புதிய கார், அடுத்த ஆண்டு முடிவுக்குள் அறிமுகப்படுத்தப்படும்.

மின்சாரத்தில் இயங்கும் தெஸ்லாவின் 'எஸ்' ரக கார், உலகின் சிறந்த மின் வாகனம் என பெருமைபெற்றாலும், அதன் உயர்வான சந்தை விலை காரணமாக, அது செல்வந்தர்களுக்கான வாகனம் என்றே கருதப்படுவதையடுத்து, குறைந்த விலையிலான இப் புதிய காரைத் தயாரிக்கும் நடவடிக்கையில் தெஸ்லா இறங்கியுள்ளது.

# பேய் சமைக்கும் ஜனநாயகம்

**குற்றங்களும் ஊழல்களும் மலிந்து, விசாரித்து, தண்டிக்கவேண்டிய அமைப்புகளும் அதிகாரிகளுமே குற்றவாளிகள் என்ற நிலையில், மனச்சாட்சியுள்ள குடிமகன் தவித்துப் போகிறான்**

மனம் நொந்து சொன்னார் பாரதியார் - 'பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்று. அதை, தினம்தினம் நினைத்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. எதிலும் நடைமுறைகள் நியாயமாக இருக்கவேண்டும் என்பதற்காக வகுக்கப்பட்ட விதிமுறைகளே சாத்திரங்கள். அவற்றைப் பிணம் தின்கிறது என்றால் அரசாள்பவர் யார்?

இப்போது குற்றப்புலனாய்வு அமைப்பான சி. பி. ஐ. உச்ச நீதிமன்றத்தால் கடிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. முன்பு, ஊழல் தடுப்பு ஆணையர் நியமனத்தில் அரசு இதே மன்றத்தின் கண்டனத்தைப் பெற்றது. அந்த அளவுக்கு குற்றங்களும் ஊழல்களும் மலிந்துவிட்டன. விசாரித்து, தண்டிக்கவேண்டிய அமைப்புகளும் அதிகாரிகளுமே குற்றவாளிகள் என்ற நிலையில், மனச்சாட்சியுள்ள குடிமகன் தவித்துப் போகிறான். எனவே, நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு முன்பு மக்கள் ஒன்றுதிரண்டு, புதியதோர் இயக்கத்தை நடத்தவேண்டும். அது இப்போது பிறக்காவிட்டால் நாட்டில் மீட்சிக்கு வழியில்லை. அந்த இயக்கம் என்ன? அது செய்யவேண்டியது என்ன?

புதிய இயக்கத்தினர் ஜனாதிபதியைச் சந்தித்து, உடனே நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் கலைத்துவிடுங்கள்; ஒருவருட காலத்துக்கு தேர்தலை ஒத்திவையுங்கள் என்று நிர்ப்பந்திக்கவேண்டும். இடைக்காலத்தில், நாட்டின் நடுநிலை அறிவு ஜீவிகளை அழைத்து, அரசியல் சாசனத்தில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் என்ன என்பதை ஜனாதிபதி விவாதிக்கவேண்டும்.

ஜனாதிபதியின் சில நியமனங்கள் இப்போது உள்ளதுபோல் மத்திய அரசு சிபாரிசின்பேரில் இருக்கக்கூடாது. தேர்தல் ஆணையர், சி. பி. ஐ. தலைவர், சி. வி. சி. (*Central Vigilance Commission* - மத்திய கண்காணிப்பு கமிஷன்) தலைவர், தலைமைக் கணக்காயர், தலைமை நீதிபதி போன்ற பொறுப்புக்களுக்கு அந்தந்தத் துறைகள் சார்ந்த அறிவாளிகள் குழுமம் (கொலீஜியம்) சிபாரிசு செய்யும் நபர்களையே ஜனாதிபதி நியமிக்கவேண்டும். இவர்கள் ஜனாதிபதிக்கு நேரடியாக தகவல் கொடுப்பவர்களாகவும், அவரிடமிருந்துமட்டுமே உத்தரவு பெறுபவர்களாகவும் இருக்கவேண்டும்.

சமீபகால ஜனாதிபதிகள் 'சூப்பர்' பிரதமரின் எடுபிடிகளே. ஆளும் கட்சி தயவினால் நியமனம் பெறும் ஜனாதிபதி மக்கள் நிர்ப்பந்திக்காமல், நாட்டின் அவல நிலையைக் கருதி சுயமாக சில நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் முறையும் மாறவேண்டும். அதைப் பின்னர் செய்துகொள்ளலாம். அதற்கு முன்பு, ஜனாதிபதியை ஜனநாயக அரங்கிற்கு, ஜனநாயக உணர்வுக்குக் கொண்டுவரவேண்டும். சி.பி.ஐ., சி.வி.சி., தேர்தல் கமிஷன், அயல் உறவு, உளவுத் துறை ஆகிய பொறுப்புக்களுக்கு ஜனாதிபதியின் நேரடி நியமனம் தேவை.

சுய புத்தி உள்ள மனிதர் பிரதமராக இருந்தால் இந்தமாதிரி சீர்திருத்தங்கள் பற்றி இப்போது நாம் யோசித்துப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. பத்து வருட காலமாக பினாமி ஆட்சியில் அவதிப்படும் மக்களுக்கு இது அவசியமாகிறது. ஏற்கனவே உள்ள சட்டதிட்டங்களின் நடைமுறைப்பாங்கில் புதிய விதிமுறைகளைப் புகுத்தவேண்டும். முக்கியமாக, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் திருத்தப்படவேண்டும். ஜனாதிபதி தன் பிரத்தியேக அதிகாரத்தின்படி இதைச்செய்து, அடுத்த நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறலாம்; தவறில்லை.

வெளிநாட்டில் பிறந்தவர்கள் இங்கே குடியுரிமைபெற்றாலும், தேர்தலில் பங்குபெறக்கூடாது. இவர்கள் நாடாளுமன்றம், சட்டமன்றம், அரசின் பல்வேறு குழுக்களில் நியமன உறுப்பினர்களாகவும் இருக்கக்கூடாது. இந்த இரண்டும் அவசரகால நடவடிக்கையாக செய்யப்படவேண்டிய முக்கிய சீர்திருத்தங்கள். இல்லாவிட்டால், இந்தியாவில் ஜனநாயகம் என்ற பெயரில் இருட்டு சர்வாதிகாரமே தொடரும். இந்திரா காந்தி காலத்திய 1975 நெருக்கடி நிலைமையைவிட மோசமான கட்டத்தில் இருக்கிறது நாடு. பேய் தின்றதுபோக, சாத்திரங்கள் எதுவும் மிச்சம் இல்லை என்ற அவல நிலை உருவாகிவிட்டது.

பிற நாடுகளின் வெளிப்படையான சர்வாதிகாரிகளை மக்கள் வெகுகாலம் கஷ்டப்பட்ட பின்னர் தூக்கி எறிந்திருக்கிறார்கள். இருட்டு சர்வாதிகாரியின் ஆட்சி இந்தியாவுக்கும் உலகுக்கும் புதிதோ புதிது. அலங்காரப் பதவியைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு, அசல் அதிகாரங்களைத் தன்னிடமே வைத்துக்கொண்டிருக்கும் இருட்டு சர்வாதிகாரி சோனியா காந்தி, எல்லாவித கண்டனங்கள், தண்டனைகளிலிருந்து தப்பிவிடுகிறார்; தனக்கு வேண்டியனவற்றைச் சாதித்துக்கொள்கிறார். தட்டிக் கேட்கப்படாதவராக விளங்குகிறார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை நோக்கித்தான் கூப்பாடு போட முடிகிறது. இவரைநோக்கி விரலை நீட்ட முடியவில்லையே.

எனவே, மக்கள் விழிப்புணர்வுடன் ஒன்றுதிரண்டு உடனே தேர்தலை நிறுத்தி, ஜனாதிபதி ஆட்சியைக் கொணர்ந்து, புதிய ஜனநாயகத்திற்காக புரட்சிசெய்யாவிட்டால், ஒரு பேய் போய் இன்னொரு பேய் வருவதைத் தவிர்ப்பதற்கில்லை. பெரிய பேய் போய் சின்னப் பேய் வந்தாலும் கெடுதல்கள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். பேய் சமைக்கும் ஜனநாயகம் இனியும் தொடரவேண்டுமா? ■

இலங்கை அரசியலில் வடமாகாண சபைத் தேர்தல் சமாச்சாரமே தற்போது சூடுபிடித்திருப்பதோடு, இத் தேர்தலுக்கு வழிசமைக்கும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் பற்றிய சர்ச்சையும் தென்னிலங்கையில் வாதப் பிரதிவாதங்களுக்குள்ளாகியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம், வடமாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை அரசில் அங்கம் வகிக்கும் தீவிரவாத போக்குடைய கட்சிகள் கடுமையாக விமர்சித்துவருகின்றன. ஆயினும், அரசில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட இடதுசாரித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டியு குணசேகர ஆகியோர் இத் திருத்தச் சட்டத்துக்கு தமது முழு ஆதரவையும் தெரிவிக்கின்றனர். இம் மூவரும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவிவகிக்கின்றனர். அத்துடன், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் எப்போதுமே ஒரு பரந்த கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாகவும் விளங்குகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர், பாராளுமன்ற கட்டடத்தில் இம் மூன்று இடதுசாரி அமைச்சர்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களைச் சந்தித்து, 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். அச் சட்டம் உள்ளடக்கும் பொலீஸ், காணி அதிகாரங்கள் அம் மாகாண சபைக்கு வழங்கப்படவேண்டும் என்ற கருத்தையும் இவர்கள் கொண்டுள்ளனர்.

இலக்கம் 13, பொதுவாகவே ஒரு துரதிருஷ்ட எண்ணாக கருதப்படுவதுண்டு. இலங்கையில் தமிழர் அரசியலிலும், அரசியலமைப்பின் இந்த 13ஆவது திருத்தச் சட்டம் அதன் ஆரம்பம்முதலே துரதிருஷ்டமான வகையிலேயே அமைகிறது. இத் திருத்தத்துக்கு வழிவகுத்த இலங்கை - இந்திய ஒப்பந்



# 13இன் துரதிருஷ்டம்?

**சிங்கள அரசியல் தலைவர்களை 'விட்டுக்கொடுக்க' வைத்து கைச்சாத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் வலுவிழந்தமைக்கு தமிழர்களும் முக்கிய காரணம்**

**தண்டாயுதன்**

தம் கைச்சாத்தான தருணத்தில், ஓர் அபசகுனம்போல கொழும்பில் ஆயுத படையினர் அளித்த அணிவகுப்பு மரியாதையில் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கடற்படை வீரர் ஒருவரால் துப்பாக்கியால் தாக்கப்பட்டார். அதன் பின்னர், திருத்தச் சட்டமும் அதனடிப்படையிலான வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை நிர்வாகமும் தோல்வியைத் தழுவின.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்கி, வடக்கு - கிழக்கு மாகாண சபையை உயிர்த்துடிப்புடையதாக்கும் விதத்தில் இந்திய இராணுவம் எடுத்த முயற்சிகளும் தோல்வியையே அடைந்தன. சுமார் ஆயிரம் இந்திய இராணுவத்தினர், இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் வெற்றிகரமான அமுலாக்கத்துக்கென தமது உயிரைத் தியாகம் செய்திருந்தனர். இவை யாவற்றுக்கும் மேலாக, இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் படுகொலை செய்யப்பட்டார். அவருக்கு, வடக்கு - கிழக்கு இணைப்பின் அவசியத்தையும் மாகாண சபை நிர்வாகத்தில் காணி, பொலீஸ் அதிகாரங்கள் உள்பட, முக்கிய அதிகாரங்களின் தேவையை எடுத்துரைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், அவரோடு துணைநின்ற யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டனர். அம்மாகாண சபைக்கான அதிகார பரவலாக்கல் வரைவை வரைந்த சட்ட நிபுணர் கலாநிதி நீலன் திருச்செல்வமும் கொல்லப்பட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அங்கம் விகித்த பலர் கொல்லப்பட்டனர். இவர்களில், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபாவும் உள்ளடங்குவார்.

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபை நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டபோது, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகள் நிறைவேறுவதற்கான ஓர் அடித்தளமாகவே அது அமைந்திருந்தது. கிழக்கில் காணப்பட்ட அத்துமீறிய சிங்கள குடியேற்றங்கள் அகற்றப்பட்டு, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் 'பூர்வீக பூமி' என்ற நிலைப்பாடு வலுப்பெறுவதாகவும் அமைந்தது.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அணுகுமுறைகளும், வடக்கு - கிழக்கு மாகாண சபையை ஏற்பதில் அவர்கள் வெளிப்படுத்திய எதிர்ப்பும் இன்று, இலங்கைத் தமிழர்களை அரசியல் ரிதியில் அநாதைகளாக்கிவிட்ட நிலையே தென்படுகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்னையைப் பொறுத்தவரை பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் ஆகியவற்றின் தோல்வி, பாதகமான சூழ் நிலைகளுக்கு வழிவகுத்ததென சொல்லப்பட்டது. ஆனால், இந்தியாவின் அநுசரணையோடு இலங்கத் தமிழர் நலன் கருதியதாக ஏற்படுத்தப்பட்ட 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு முதலில் வேட்டு வைத்தது தமிழர்களே என்பதும் குறிப்பிடப்பட வேண்டும். பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் குழப்பிய ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் அவரது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சியையும் 'விட்டுக்கொடுக்க' வைத்து, இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது; அதனுடன் தொடர்பாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தமும் ஏற்பட்டது. அதில், வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையும் உருவானது.

ஆனால், தற்போது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைப்பறுந்து, அவற்றுக்கான அதிகாரங்களும் கேள்விக்குள்ளாகியுள்ளன. இவை யாவற்றுக்கும் மேலாக, தற்சமயம் வடக்கு - கிழக்கு தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் ஆளுமைமிக்க அரசியல் தலைமைத்துவம் இல்லாதிருப்பதும் மிகப் பரிதாபகரமான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டுள்ளது.

அண்மையில், மன்னார் கத்தோலிக்க மறைமாவட்ட பேராயர் இராயப்பு ஜோசப் மாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தார். தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை உறுதிசெய்யும் விதத்தில் இம்மாநாடு கூட்டப்பட்டிருந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுடன், புத்திஜீவிகளும் மற்றும் வடக்கின் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் பலர் இம்மாநாட்டில் பங்குபற்றினர். தமிழ் தேசிய கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக பதிவுசெய்யவேண்டும் என்ற, தமிழரசு கட்சி தவிர்ந்த, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசியல் கட்சிகளின் கோரிக்கை அங்கு பரிசீலனைக்கு வந்தது. இக்கோரிக்கை தொடர்பாக அம் மாநாட்டில் எழுந்த வாத பிரதிவாதங்கள், தமிழர் தரப்பின் அரசியல் அவலங்களை வெளிச்சம்போட்டுக் காட்டுவதாகவே அமைந்தது.

வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்காது, அவர்களை அடக்கி ஆளவேண்டுமென்பதிலேயே இலங்கையின் பேரினவாத அரசாங்கங்கள் செயல்பட்டுவருகின்றன. அவற்றின் போக்கு எப்போதுமே தமிழ் மக்களுக்கு குழிபறிப்பதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால், கடந்த முப்பது வருடகால தமிழர் அரசியலில், குறிப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை யடுத்து தோன்றிய காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு தமிழர்கள் தமக்குத் தாமே குழிபறித்த அரசியலே பெரிதும் நிலவியிருந்ததைக் காணமுடியும்.

மிதவாத அரசியலில் மட்டுமன்றி, தீவிரவாத அரசியலிலும் குத்துவெட்டுகள், துரோகத்தனங்கள் என்பன மலிந்துகிடந்தன. தீவிரவாத அரசியல் இறுதியில் தமிழர்களது அடையாளங்களையே இலங்கையில் இல்லாதொழிப்பதாக அமைந்திருந்தது. 'பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி' என்று கூறுமளவில் ஆயுத போராட்டத்தின் விளைவுகள் அமைந்திருந்தன. ஆயுதப் போரின் இறுதி முடிவு, இலங்கையில் தமிழ் இனத்தை அடமானமாக்குவதுபோலான துயர நிலையில் முடிவுற்றது.

கடந்தகால தோல்விகள், இழப்புகள், அவற்றினால் ஏற்பட்ட படிப்பினைகளை உரியவகையில் அனுமானித்து, உறுதியான அரசியல் பயணத்தை வகுக்க தமிழ் அரசியலாளர்கள் எப்போதும்போல தவறியேவருகின்றனர். இதற்கு, மன்னார் பேராயர் கூட்டிய மாநாடு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கின்றது.

இந் நிலையில், இவ்வருட இறுதியில் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசு கூறியுள்ளது. ஆனால், பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொலீஸ், காணி அதிகாரங்கள் வட மாகாண சபைக்கு வழங்கப்பட மாட்டாது என கூறியுள்ளார்.

பேரினவாத கட்சிகள் 13ஆவது திருத்தத்துக்கெதிராக போர்க்கொடி உயர்த்தி நிற்கின்றன. மறுபுறத்தே, தமிழ் அரசியல் கட்சிகள் தம்மிடையே வேற்றுமைகளை வெளிப்படுத்தி வருகின்றன. இச்சூழலில், எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறிய, 'இனி, தமிழர்களை இறைவன்தான் காப் பாற்றவேண்டும்' என்ற கூற்று, காலத்தை உணர்த்தி எதிரொலிக்கிறது. ■

## பாகிஸ்தானில் ஆட்சி மாற்றம்

# இந்தோ - பாக். உறவில் திருப்பம்?

### இருநாடுகளுக்குமிடையிலான ஒற்றுமையின் வலிமையை அறிந்தவர் நவாஸ் ஷெரீப்

சந்திர பிரவீண் குமார்



பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் பெரும்பான்மை இடங்களைப் பெற்றதும், மறுநாள் இந்தியாவில் வெளியான 'நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை, 'பாகிஸ்தானில் மலரவிருக்கும் தலைமையை எதிர்கொள்ள இந்தியா தயாராகிக்கொண்டிருக்கிறது' என்று தலைப்புச் செய்தி வெளியிட்டது. நவாஸ் ஷெரீப், இந்தியாவின் நட்புறவை விரும்புபவர் என்று பரவியுள்ள நம்பிக்கை இதற்குக் காரணம்.

என்னதான் பாகிஸ்தான் இந்தியாவுக்கு பகைநாடாக இருந்தாலும், அது அண்டை நாடாகவும் இருப்பதால் பாகிஸ்தானுடன் நட்புறவை வைத்துக் கொள்ளவே இந்திய அரசு விரும்புகிறது. ஆனால், பாகிஸ்தானின் உள்நாட்டு அரசியலும், அதன் புலனாய்வு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.இன் நடவடிக்கைகளும், பாகிஸ்தான் இராணுவத்தின் போக்கும் இதற்கு எதிராக இருக்கின்றன. பாகிஸ்தான் அரசியல்வாதிகளில், இந்தியாவுடனான ஒற்றுமையின் வலிமையை அறிந்தவர்களில் ஒருவர் நவாஸ் ஷெரீப். அவர் ஆட்சிக்கு வரும் போதெல்லாம் இந்தியாவுடனான நட்புறவை வளர்க்கவே விரும்புவார். அப்படியானவர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அது இந்திய அரசுக்கு உற்சாகத்தை ஏற்படுவது இயல்பானதே.

1999 ஆம் ஆண்டு நடந்த கார்கில் யுத்தத்தில் தோல்வியடைந்த பின்னர், பாகிஸ்தான் கடும் நெருக்கடியில் சிக்கி வருகிறது. இந்தியாவைக் குறிவைத்து பாகிஸ்தான் வளர்த்த பயங்கரவாதம், 'வரம் கொடுத்தவன் தலையில் கை வைப்பதுபோல' அதையே திருப்பித் தாக்குகிறது. ஆப்கானிஸ்தானிலிருந்து வரும் தொல்லை அதனைப் பாடாய்ப் படுத்துகிறது. பொருளாதாரம் அடிபட்டுவிட்டது. இனியும், இந்திய எதிர்ப்பைமட்டும் வைத்துக்கொண்டு பாகிஸ்தானை ஆட்சிசெய்யமுடியாத நிலையில் நவாஸ் ஷெரீப் வெற்றிபெற்றுள்ளார்.

நவாஸ் ஷெரீப் முன்னர் ஆட்சியில் இருந்தபோது 1999இல், அப்போது இந்திய பிரதமராகவிருந்த அடல் பிஹாரி வாஜ்பாயுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி, இந்தியாவுடன் ஒரு சுமுக உறவைப் பேணினார். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே அந்த நல்லெண்ண அடிப்படையில் பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. வர்த்தக உறவுகளும் வலுப்படத் துவங்கின. ஆனால், அப்போதைய பாகிஸ்தான் இராணுவ தளபதி பேர்வெஷ் முஷாரபின் உத்தரவில் கார்கில் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் ஊடுருவியது. அதன் விளைவான கார்கில் யுத்தத்தின் இறுதியில் பாகிஸ்தான் தோல்வியைச் சந்தித்தது.

அதனால் ஆத்திரமடைந்த முஷாரப், நவாஸ் ஷெரீப் ஆட்சியைக் கவிழ்த்து, பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தினார். சுமார் ஒன்பது ஆண்டுகள் நீடித்த இராணுவ ஆட்சியில் பாகிஸ்தான் முழுவதும் பயங்கரவாதங்கள் உருவெடுத்தன. குறிப்பாக, 2001க்கு பின்னர், அமெரிக்காவின் கழுகுப் பார்வை ஆப்கானிஸ்தானை விட, பாகிஸ்தானைத்தானில் வீழ்ந்தது. 'பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு' என்ற எண்ணம் மேற்குலகில் பரவியது. ஓசாமா பின் லாடன் பாகிஸ்தானில் பதுங்கியிருந்ததும், சர்வதேச அரங்கில் அதன் ஸ்தானத்தை பலவீனப்படுத்தியது. விளைவாக, பாகிஸ்தானில் என்றுமில்லாத பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது.

இந்த நெருக்கடிகள் சரிசெய்யப்படவேண்டுமெனில், பாகிஸ்தானில் ஜனநாயகம் மலர வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் வலியுறுத்தின. அதனால், 2008ஆம் ஆண்டு பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற்றது. உண்மையில், நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் அப்



நவாஸ் ஷரீப், வாஜ்பாய்

போதே ஆட்சிக்கு வரக்கூடிய சூழல் நிலவியது. ஆனால், தேர்தல் பிரசாரத்தில் முன்னாள் பிரதமர் பெனாஸிர் புட்டோ, பயங்கரவாத தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டதையடுத்து பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. அக்கட்சியைச் சேர்ந்த அஷ்ரப் அலி பிரதமரானார். அடுத்துவந்த ஜனாதிபதி தேர்தல் பெனாஸிர் புட்டோவின் கணவர் சர்தாரி அதிபரானார்.

இராணுவ ஆட்சியிலிருந்து ஜனநாயகத்துக்கு திரும்ப விரும்பும் மக்களின் எண்ண ஓட்டத்தை அந்த ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றே சொல்லவேண்டும். பாகிஸ்தான் மக்கள் கட்சியின்மீது ஊழல் புகார்கள் கிளம்பின. ஊழல் வழக்கு ஒன்றில் பிரதமர் அஷ்ரப் அலி பதவிவிலக நேர்ந்தது. 'தலிபான்களின் ஆட்சியோ அல்லது இராணுவ ஆட்சியோ கூட பரவாயில்லை' என்று பாகிஸ்தான் மக்கள் நினைக்கும் அளவுக்கு இமாலய ஊழல்களில் சர்தாரியின் ஆட்சி கொடிநாட்டியது.

இந்த எண்ணங்களை மீறி, இப்போது நடந்து முடிந்திருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் வெற்றிபெற்றிருக்கிறார். முன்னாள் கிரிக்கெட் ஆட்டக்காரர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தஹ்ரிக் இ இன்சாப் (பி.ரி.ஐ.) கட்சி 25க்கும் அதிகமான ஆசனங்களை தேர்தலில் வென்றுள்ளது. சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 30 வரையிலான ஆசனங்களையே வென்றது.

இம்ரான் கானின் வெற்றியும் குறிப்பிடப்படவேண்டியதே. நவாஸ் ஷெரீப், சர்தாரி ஆகியோர் பாகிஸ்தானின் பாரம்பரிய அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், இம்ரான் கான் அப்படியானவரல்லர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான இம்ரான், முதல் தலைமுறை அரசியல்வாதி. கடந்த பத்து ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டுள்ள அவர், ஊழல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்துவருகிறார். அவருக்கு, தலிபான்களின் ஆதரவு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இம்ரான் கானுக்கு கிடைத்துள்ள கணிசமான வாக்குகள், மக்களின் தலிபான் ஆதரவு நிலையை வெளிப்படுத்துவதாக பாகிஸ்தான் செய்தி ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. 'வெகு விரைவிலேயே இம்ரான் தனது தவறை உணர்ந்துகொள்வார்' என்றும் சொல்லப்படுவதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கட்டுரையொன்று தெரிவிக்கிறது.

ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கிய சர்தாரியின் ஆட்சியில் இந்தியாவுடனான உறவு சீர்கெட்டுக் கிடந்தது. எல்லையில், இரண்டு இந்திய இராணுவ வீரர்களின் தலையைக் கொய்தமை; பல ஆண்டுகளாக சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்திய பிரஜையான சரப்ஜித் சிங்கை மர்மமான முறையில் கொன்றமை ஆகிய கொடுரங்கள் இவரின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தன. குறிப்பாக, சரப்ஜித் சிங், தேர்தலுக்கு சில நாள்களுக்கு முன்புதான் கொல்லப்பட்டார். பாகிஸ்தானியர்கள் இந்திய எதிர்ப்பு வலையில் சிக்கியிருந்தால், சர்தாரியின் கணக்கு பலித்திருக்கும். ஆனால், அவர் தோற்றமை, பாகிஸ்தான் மக்களின் உணர்வு, சமாதான சகவாழ்வை நாடுவதை வெளிப்படுத்துவதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆட்சியமைத்தவுடனேயே நவாஸ் ஷெரீப்மீது ஏராளமான சுமைகள் சேர்வது சகஜம்தான். முக்கியமாக, பல்முனை பயங்கரவாதத்தாலும், உள்நாட்டு குழப்பங்களாலும் சீர்குலைந்த பாகிஸ்தானின் பொருளாதாரத்தைச் சீரமைக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது. உலக அரங்கில் சரிந்துள்ள பாகிஸ்தானின் மதிப்பைத் தூக்கி நிறுத்தும் சுமையும் உள்ளது. அவரது வெற்றிச் செய்தி வெளியானதும், இந்தியாவுடன் முன்னைய சுமுக உறவை மீண்டும் புதுப்பிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார். பெருகிவரும் பாகிஸ்தானிய பயங்கரவாதங்களால், கடந்த பத்து ஆண்டுகளாக பாகிஸ்தான்மீதான தனது கோபத்தை அமெரிக்கா அதன் பல்வேறு நடவடிக்கைகளிலும் வெளிப்படுத்திவருகிறது. இந்நிலையில், உலக அரங்கிலும் பாகிஸ்தான் பற்றிய நல்லெண்ணத்தை அவர் வலுப்படுத்தவே முயல்வார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நவாஷ் ஷரீப் தெரிவாகியிருக்கிறார். ஆனால், இந்தியாவில் அடுத்த ஆண்டு தேர்தல் நடக்கவுள்ளது. காங்கிரஸ் ஆட்சியின் சீர்குலைவுகளால், பாரதிய ஜனதா மீண்டும் ஆட்சிக்குவரும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஒருவேளை, நவாஸ் ஷெரீபுக்கும் அந்த யூகம் இருக்கலாம் என்று இந்தியாவில் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். ■




முஸ்லிம்களுக்கு எதிரான பௌத்த தீவிரவாதம்


# அடையாளத்தை பேணுவதில் ஏற்படும் அச்சம்

**புலிகளை வெற்றிகொண்டதன் மூலமாக இன்றைய அரசு, சிங்கள தேசியவாத சக்திகளுக்கு எல்லாளனை வெற்றிகொண்ட பெருமிதத்தை ஏற்படுத்தியிருக்கிறது**

எஸ். எம். எம். பசீர்

"நான் விரைவாக மரணிக்க வேண்டும்; எனது மரணவேதனையை நீடிக்கவிட முடியாது. புத்தரின் தர்மத்தைப் பரப்ப, நான் இருபத்தைந்து தடவைகள் புனர்ஜென்மம் எடுக்க வேண்டும்'' - மரணப்படுக்கையில், அநகாரிக தர்மபாலா கூறியது.

இலங்கையின் வரலாற்றில் இனங்களுக்கிடையிலான 'முறுகல்' என்பது, பல்வேறு காலங்களில், பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டு வந்திருக்கிறது. மஹாவம்ச கதைகள் குறிப்பிடும் மிக முக்கிய இனப் பகைமைபற்றிய கதை, எல்லாளன் - துட்டகைமுனு கதை. தெற்கிலே, சுதேசிய ஆட்சியாளனான துட்டகைமுனுவுக்கும், தென்னிந்திய சோழ இராச்சிய ஆக்கிரமிப்பின் பிரதிநிதியாக காணப்பட்ட எல்லாளனுக்குமிடையிலான, ஆட்புல பகை முரண்பாட்டு இனவாத கூறுகளைக்கொண்டு இது கட்டமைக்கப்பட்டது. இனரீதியான கூறுகளை முன்னிலைப்படுத்திய, ஆட்புல ஆதிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரானதாகவே எல்லாளுடனான



துட்டகைமுனுவின் யுத்த வெற்றி பார்க்கப்படுகிறது. இந்த மஹாவம்ச கதையின் பின்னணி, இன முரண்பாட்டுக் கூர்மையடைந்த தமிழ், சிங்கள தனிமங்களின் மனவமைப்பில் ஆழமாக ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாக இன்று வரை இருந்துவருகிறது. அதனால்தான், மஹாவம்ச மனநிலை என்பது, தமிழ் - சிங்கள இன முரண்பாடுகளுக்கு உரைகல்லாக அமைந்துவிட்டது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பௌத்த - முஸ்லிம் உறவில் அவ்வப்போது, ஆங்காங்கே சிறிய அளவிலான இன முறுகல்கள் - வன்முறைகள் ஏற்பட்டிருக்கின்றன. என்றாலும், அவை வரலாற்றுப் பக்கங்களை ஆக்கிரமிக்குமளவு மோசமானவையாக 1915க்கு முன்னர் இருந்திருக்கவில்லை. இலங்கையில் மன்னராட்சிக் காலத்தில், குறிப்பாக அந்நிய காலனித்துவ ஆக்கிரமிப்புக் காலங்களில், முஸ்லிம் மக்கள் சிங்கள பௌத்த மக்களின் பெரும் நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது ஆதாரபூர்வமான வரலாற்றுப் பதிவாக உள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட இலங்கையில் குடியேறிய 'கரையோரச் சோனகர்' *(Costal Moor)* என்று அழைக்கப்பட்ட இந்திய சோனகர்களின் (முஸ்லிம்களின்) அபரிதமான பொருளாதார நடவடிக்கைகள்மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையிலேயே முதன்முதலில் இலங்கையில் பேரினவாத சூறாவளி வீசிற்று. முஸ்லிம்களுக்கெதிராக சிங்கள இனவாதிகளால் பயன்படுத்தப்படும் 'தம்பிலா' என்ற சொல்லைப்போல, அநகாரிக தர்மபாலா உள்பட்ட சிங்கள பௌத்த இனவாதிகள், தங்களின் பொருளாதாரத்தைச் சுரண்டுபவர்களாக, குடியேற்ற வாசிகளான இந்தியச் சோனகர்களை 'ஹம்பயாஸ்' என்று குறித்து, இழித்துரைத்தனர். உள்ளரங்கமாக அன்று இந்திய பொருளாதார ஆக்கிரமிப்புக் கெதிரான பிரச்சாரமாக முன்னெடுக்கப்பட்ட பௌத்த சிங்கள இனவாதம், இலங்கையின் காலனித்துவ ஆட்சியில், வெளியரங்கத்தில் சிங்கள தேசியவாத பரிமாணத்தை கொண்டமைந்தது.

ஆனால், இந்த இனவாத (இந்திய சோனகர்) தாக்குதல், மத்திய மாகாணத்தில் கருக்கொண்டு தெற்கிலே பரவி, ஆங்காங்கே பொதுவாக சுதேசிய முஸ்லிம் மக்களையும் பாதித்தது. ஆனால், இந்த கரையோர முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் பொருளாதார ஆக்கிரமிப்பின் வெளிப்பாடாக மட்டுமல்லாமல், அதனையொட்டி எழுந்த நிகழ்வுகள் யாவும் இலங்கையின் அந்நிய காலனித்துவ அடக்குமுறைக் கெதிரான தேசிய எழுச்சி நிகழ்வாகவும் வரலாற்று ஆய்வாளர்களால் பார்க்கப்படுகிறது.

பின்னாளில், 1915 கலவரத்தை தூண்டியவர் என்று குற்றம்சாட்டப்பட்டு, கைதுசெய்யப்பட்டு விடுதலையான தேசியவாதியான ஏ. ஈ. குணசிங்க, அப்போது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் அடக்குமுறையில் பலியான பௌத்தர்கள், முஸ்லிம்கள் ஆகியோரின் நினைவுக்கான துக்கதினம் ஒன்றினை பிரேரித்தார் (பௌத்தர்களாலேயே அதிகமான துன்புறுத்தலுக்கும் உயிரியிழப்புக்கும் முஸ்லிம்கள் உள்ளாகினர்). இதன்மூலம், ஒரு தேசிய விடுதலை முகத்தை இக்கலவரத்துக்கு வழங்க குணசிங்க முற்பட்டாலும், மறுபுறத்தில் அவரின் அந்த முன்மொழிவு, புதுப்பிக்கப்பட்ட பௌத்த - முஸ்லிம் உறவையும் கோடிட்டுக் காட்டியது.

சுதந்திரத்தின் பின்னர் முஸ்லிம், பௌத்த மக்களுக்கிடையிலான இன முறுகல்களும் அதனையொட்டிய வன்முறைகளும் பெரும்பாலும் இரு சமூகங்களுக்குமிடையில் இடம்பெற்ற தனிநபர் மோதல்களின் விளைவாகவே அமைந்தன என்பதால், சம்பந்தப்பட்ட பிரதேச எல்லைக்குள் முடங்கியதாகவே அச் சண்டை சச்சரவுகள், வன்முறைகள் இடம்பெற்றன. முஸ்லிம் மக்கள்மீதான தாக்குதல்கள் பெருமளவில் மதரீதியான சகோதரத்துவ அக்கறையினை இலங்கையின் வேறு பாகங்களில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தினனாலும், அவர்கள் அவ்வாறான சூழ்நிலைகளில் மிகக் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் நடந்துகொண்டனர். மிகமுக்கியமாக, இன முறுகல் மற்றும் வன்முறைச் சூழ்நிலைகளில் முஸ்லிம் மக்கள் பொறுமை காப்பதும், பௌத்த சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் இனநல்லுறவை பேணுவதில் அக்கறை காட்டுவதும், பொதுவாக அவதானிக்கக்கூடிய ஒரு நடைமுறையாக இருந்துவந்திருக்கிறது.

ஒரு தொடர்ச்சியான ஒருங்கிணைக்கப்பட்ட, நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்த மேலாதிக்க முஸ்லிம் எதிர்ப்பு சக்திகளின் எழுச்சிக்கு தடையாக இவ்வாறான பொதுமையான சமூக பிரதிபலிப்புக்கள் இருந்திருக்கமுடியும். எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு பிரிவினைவாத ஆயுத போராட்ட காலகட்டங்களில், இரண்டாவது பிரதான இனமான முஸ்லிம்

மக்கள் மீதான பௌத்த தீவிரவாத தனி மங்களின் பார்வை சற்று தாழ்ந்தே இருந்தது.

மேற்குலகில் இடம்பெற்ற சில பயங்கரவாத சம்பவங்களை முஸ்லிம் பயங்கரவாத நடவடிக்கைகளாக உலகின் செல்வாக்குமிக்க செய்தி ஊடக பிரச்சாரம் முன்வைத்தபொழுதும், இலங்கையில் பௌத்த தீவிரவாத சக்திகள் முஸ்லிம்களுக்கெதிராக எவ்வித குற்றச்சாட்டையும் இப்பொழுது போல (வஹ்ஹபிகள், சவூதி அரேபிய பணம், ஹலால் சான்றிதழ்மூலம் சம்பாதிக்கப்படும் பணம் இலங்கை ஜம்மியத்துல் உலமாவினால் பயன்படுத்தப்படும் விதம் போன்றன) முன்வைக்கவில்லை.

சுதந்திர இலங்கையில், குறிப்பாக கடந்த மூன்று தசாப்தங்களாக முஸ்லிம்களின் இஸ்லாமிய மதம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள், அவர்களின் உடை நடைமுறைகள், மெதுவான சில மாற்றங்களுக்கு உள்பட்டே வந்திருக்கிறது. ஆனாலும், அவற்றையும் பௌத்த இனவாத சக்திகள் அறிந்திருந்தும் பெரிதாக பொருள்படுத்தியதாக காட்டிக்கொள்ளவில்லை. ஆயினும், நீறுபூத்த நெருப்பாய் முஸ்லிம்கள்மீதான ஒரு பகைமை சிங்கள பௌத்த தீவிரவாத சக்திகளிடம் இருந்தே வந்தது. இந்த முஸ்லிம் மத எதிர்ப்பு செய்தி ஊடகம், கலைத்துறை (நாடகம், சினிமா) போன்ற வெகுஜன சாதனங்கள்மூலம் அவ்வப்போது தலைகாட்டி வந்திருக்கிறது. அதன் பின்னணியில் ஒரு தொடர்ச்சியான இனக்குரோதம் வெளிப்பட்டு வந்திருக்கிறது. அவை திட்டமிட்ட வகையில், பௌத்த சிங்கள மக்களுக்குள் ஒரு முஸ்லிம் எதிர்ப்பு மனநிலையினை தோற்றுவிக்கும், மறைமுக நிகழ்ச்சி நிரலைக்கொண்டிருந்தன. ஆனால், பரந்துபட்ட ரீதியில் சிங்கள பௌத்த மக்கள் அவ்வாறான பிரச்சாரங்களால் பெரிதும் எடுபடவில்லை. ஆயினும், பௌத்த இனவாத தனிமங்கள் இப்போது வெளிப்படையாக தங்களின் முஸ்லிம் எதிர்ப்பினை முன்னெடுக்கக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்காக ஆட்சியிலுள்ள அரசை குற்றம் சாட்டுவதோடு, அதுபற்றி பல சூழ்ச்சிக் கோட்பாடுகளையும் சிலர் முன்வைக்கின்றனர். எதுவாயினும், புலிகளை வெற்றிகொண்டதன் மூலமாக இன்றைய அரசு சிங்கள தேசியவாத சக்திகளுக்கு மீண்டுமொரு பெருமிதத்தை பெற்றுக்கொடுத்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மேலும், இலங்கையில் சிங்கள பௌத்த தனித்துவங்கள் மீண்டும் மீட்டெடுக்கப்பட்டு, நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்ற மனோபாவமும் சிங்கள பௌத்த மக்களிடம் - பொதுவாக சிங்கள மக்களிடம் நிலவுகிறது. எனவே, இன ரீதியான பெரும்பான்மை உணர்வுகள், தங்களின் அடையாளத்தை இறுக்கமாக பாதுகாப்பதில் ஏற்படும் அச்சத்தின் விளைவாக, ஏனைய சமூக அடையாளங்களில், அதிலும் குறிப்பாக, அதிக வேறுபாடான, மத சமரசத்தில் தடையாக இருக்கின்ற முஸ்லிம் மக்களின்மீது பார்வையை திருப்பியுள்ளன.


மறு புறத்தில், மத முரண்பாடுகளை தங்களுக்கிடையில் சமரசம் செய்துகொள்ளக்கூடிய தமிழ், சிங்கள சமூகங்களின் பார்வை, சமாதான காலத்தில் முஸ்லிம்கள்மீது திரும்பியதும் உணரப்பட்டது. வெளிப்படையாகவே பௌத்த மத குருமார் சிலர், சிங்களவரும் தமிழரும் (நாங்களும் நீங்களும்) சண்டையிட்டுக்கொண்டிருக்க, முஸ்லிம்கள் தம் இனத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தனர் என்று, தமிழ், சிங்கள பரஸ்பர இழப்புக்கள் குறித்து கவலை கொள்வதையும், யுத்தத்தினால் முஸ்லிம் சமூகம் இழப்புக்களை அனுபவிக்கவில்லை என்று சொன்னதையும் அவதானிக்கமுடிந்தது. இந்தக் கருத்தை ஒத்ததாக தமிழ் தரப்பினரும், முஸ்லிம்கள் தங்களை மூன்றாம் தரப்பாக அங்கீகரிக்க கோரியபொழுது வெளிப்படுத்தினர். 'நீங்கள் எங்களுடன் சேர்ந்து போராடாமல், எப்படி பங்கு கேட்கமுடியும்' என்ற தமிழ் அரசியல்வாதிகள், இன்றுவரை அப்படி கேட்பதையும் அவதானிக்க முடிகிறது.

ஆனால், இவ்வாறான கருத்துக்களில் மேலோட்டத்தில் உண்மை இருப்பதுபோல தோன்றினாலும், உண்மையில் முஸ்லிம்கள் இந்த யுத்தத்தினால் தொடர்ச்சியாக இன அழிப்பிற்கும், இனச் சுத்திகரிப்பிற்கும் புலிகளால் உள்படுத்தப்பட்டு, யுத்தத்தினால் அகதிகளாக மாறி, சுமார் இருபத்தைந்து வருடங்களாக தமது சொந்த நிலத்தில் மீள குடியேற முடியாமல், முகாம்களிலும் மூன்றடி அறைகளிலும் முடங்கிக்கிடந்த துயரங்களையும் அப்படியான கருத்துரைத்தோர் கண்டுகொள்ளவில்லை..

அந்தவகையில், 'பலசேனா' எனப்படும் பௌத்த முஸ்லிம் எதிர்ப்பு அமைப்பின் அறிக்கைகள் தமிழர்களையும், இவர்களில் பெரும்பான்மையானோரின் இந்து மதத்தையும் எதிர்ப்பவையாக இல்லை. அவர்கள் தமிழருடன் சமரசம் செய்பவர்களாகவே உள்ளனர். முஸ்லிம் மதத்தினரையே தமது பிரதான எதிரியாக அவர்கள் காட்டுகின்றனர். அதிலும் குறிப்பாக, இஸ்லாமிய மதத்தை பின்பற்றும் - மத அடையாளங்களைக் கண்டிப்பாகப் பேணும் முஸ்லிம்களை, பௌத்த பலசெனா 'அடிப்படைவாத முஸ்லிம்கள்' என்றும், தாங்கள் அவர்களுக்கு எதிரானவர்கள் என்றும் கூறுகின்றனர். பொதுவாக, இலங்கை ஒரு பௌத்த நாடு என்றும் அதில், வாழும் உரிமை மட்டும் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதுபோலவும் அவர்களின் பேச்சுக்களும் செயல்களும் அமைந்துள்ளன. இந்த அமைப்பினை ஒத்த பல அமைப்புக்கள், பல்வேறு முஸ்லிம் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரல்களைக்கொண்டு செயல்பட்டுவருகின்றன. அந்த இயக்கங்கள், அமைப்புக்கள் யாவும் சிங்கள பௌத்த தேசியவாதத்தை தீவிரமாக கடைப்பிடிப்பனவாகவும் உள்ளன.

குறிப்பாக, இலங்கையில் யுத்தம் முடிவுற்றதும் தமிழ், சிங்கள (பௌத்த) இன உறவு என்பது புதிய ஒரு யதார்த்த உலகுக்குள் நுழைந்து செல்வதுடன், இந்து மதத்தின்மீதான பௌத்த எதிர்ப்பினையோ மத அனுஷ்டான ஆட்சேபணைகளையோ சொல்லுமளவு காணமுடியவில்லை. மிருக பலிகொடுத்தல் தொடர்பாக இந்து மத சடங்குகளுக்கு தடைவிதிக்கும் விதத்தில், ஒரு பௌத்த அமைச்சர் தலைமையில் நடைபெற்ற ஒரு சம்பவம் தவிர, பெரியளவில் மத தலையிடலை பௌத்த சக்திகள் மேற்கொள்ளவில்லை.

அண்மைக்காலமாக, முஸ்லிம் மக்கள் உணவுக்காக அறுக்கும் பிராணிகள் தொடர்பில் பல கட்டுப்பாடுகளை தொடர்ச்சியாக விதிக்க அரசைக் கோரும் கோஷங்கள், ஆர்ப்பாட்டங்கள் என பல சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றன. ஆயினும், இவ்வாறான எதிர்ப்புக்கள் பெரிய மாற்றங்களை நாடாளாவிய ரீதியில் ஏற்படுத்தாத போதும், நவீன உலகின் செய்தி பரிவர்த்தனை சாதனங்கள் பிரச்னைகளை பெருப்பித்தும் விடுகின்றன. முகம்தெரியாத மனிதர்களின், முகவரியற்ற செய்தியாளர்களின், எழுத்தாளர்களின் இணையத்தள ஊடுருவல், இன முறுகல் சம்பவங்களை ஊதிப்பெருப்பித்து மத, இன உணர்வுகளை இலகுவில்



**‘கரையோரச் சோனகர்’ என்று அழைக்கப்பட்ட, இந்திய சோனகர்களின் அபரிதமான பொருளாதார நடவடிக்கைகைள்மீதுகொண்ட காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையிலேயே முதன்முதலில் இலங்கையில் பேரினவாத சூறாவளி வீசிற்று**

திரட்சியுற செய்துவிடுகின்றன. அண்மைக்காலமாக அநுராதபுரம் தொடங்கி, ஜெய்லானிவரை பல முஸ்லிம் மதத் தலங்கள், பள்ளிவாசல்கள் பௌத்த பேரினவாத தாக்குதலுக்கு உள்ளாகின. முஸ்லிம் மக்கள் அந்த அநீதிகளுக்கெதிராக உணர்வு ரீதியில் தூண்டப்பட்டாலும், அப் பிரச்னைகளை சமாதானமாக தீர்க்கும் வழிபற்றி ஆராய்வதிலேயே அநேகமான அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், மத அறிஞர்கள் என சகலரும் செயல்பட்டதையும் அவதானிக்க முடிகிறது. எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்ற வகையான, ஆளும் அரசுக் கெதிரான முஸ்லிம் அரசியலும், பௌத்த தீவிரவாத தனிமங்களும் தங்களின் நிகழ்ச்சி நிரல்களை முன்னேடுப்பதில் போட்டிபோடுவதென்பது, சட்டம், ஒழுங்கை பாரபட்சமின்றி அரசாங்கம் கையாளும் விதத்திலேயே தங்கியிருக்கிறது.

முஸ்லிம் மக்கள்மீது நடைபெறும் தாக்குதல்கள், எதிர்ப்பு ஆர்பாட்டங்கள், அவமரியாதைப்படுத்தல் என்பன, அண்மைக் காலமாகவேதான் பௌத்த மத இன தாக்குதல்கள் என்ற முகவரியுடன் நடைபெற்று வருகின்றன.

காலி, அக்குரணை, களுத்துறை, பேருவளை, குருநாகல், டிக்வெல்ல, மடவள, உகுரசபிட்டிய, கலகெதர, மாவனல்ல (மே 2001) என்பன, முஸ்லிம் மக்கள்மீதான தாக்குதல்கள் நடத்தப்பட்ட, தெற்கிலே உள்ள குறிப்பிடத்தக்க முஸ்லிம் கிராமங்களும் நகரங்களுமாகும்.

முஸ்லிம் மக்கள்மீதான தாக்குதல்கள் இதுவரை, சிறுசிறு தனிநபர் சச்சரவுகளை அல்லது வியாபாரப் போட்டிகளை அடிப்படையாகக் கொண்டவையே. அவை சில, இறுதியில் முஸ்லிம் - சிங்கள கலவரங்களாக வெடித்து, அழிவுகளையும் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தினாலும், நாடு தழுவியதாக அல்லது வெளிப்படையாக மத தீவிரவாத சக்திகளின் தலைமையில் அவை நடைபெறவில்லை. ஒரு குறிப்பிட்ட பிரதேச இன முறுகல், வன்முறையாகவே அவை அமைந்தன. மேலும், மிக விரைவாகவே சமூக உறவுகள் மீள கட்டியெழுப்பப்பட்டும் வந்தன. ஆனால், இப்பொழுது இலங்கையில் நடைபெறும் முஸ்லிம் எதிர்ப்பு என்பது, முஸ்லிம் மக்களின் மதத்தின் மீதான, அவர்களின் மத நம்பிக்கையை யொட்டிய பின்பற்றுதல்களை கேள்விக்குள்படுத்தும் ஒன்றாக அமைகிறது.

பௌத்த விகாரைகளை, அவ் விகாரைகளின் மத குருமாரைக்கொண்டு வழிநடத்தப்படுவனவாக முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த இரண்டு வருடங்களாக உள்ளூர் மட்ட முஸ்லிம் மக்களின் வணக்கஸ்தலம், அவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் விதம், உணவு, உடைபற்றி கேள்வி எழுப்புதல் என்பன, இந்த தீவிர முஸ்லிம் எதிர்ப்பு செயல்பாடுகளின் உச்சநிலை குறித்த அச்சத்தை முஸ்லிம் மக்களுக்குள் எழுப்பியுள்ளன. அதனால்தான், இது பற்றி குரல் கொடுப்போர், அவர்கள் முஸ்லிம்களாயினும் சரி அல்லது சிங்கள அரசியல்வாதிகளாயினும் சரி, 1983இல் தமிழ் மக்கள் மீதான வன்முறையையொத்த ஒன்று, முஸ்லிம்கள்மீது ஏவிவிடப்படக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கின்றனர். அவ்வாறான அச்சம் உண்மையில் மிகைப்படுத்தப்பட்ட ஓர் எதிர்வுகூரலாகும். இந்த பகையுணர்வினை முஸ்லிம்கள் எவ்வாறு தந்திரோபாயத்துடன் எதிர்கொள்ளப்போகிறார்கள் என்பதைப் பொறுத்தே பௌத்த சிங்கள தீவிரவாத சக்திகளின் போக்குக்கு கடிவாளமிடமுடியும். ஏனெனில், பௌத்த சிங்கள தீவிரவாத தனிமங்கள் எதிர்பார்ப்பதும், தங்களுக்கு எதிரான முஸ்லிம் தீவிரவாத சக்திகளை உருவாக்கி, அவர்களைச் சண்டைக்கு தூண்டுவதே.

சுதந்திர இலங்கையில் இடம்பெற்ற சகல வன்முறைகளிலும் காவல்துறை அல்லது அரசின் மெத்தனம், கலவரங்களைக் கட்டுப்படுத்த தவறியதென்பது பதிவுசெய்யப்பட்ட ஓர் உண்மையாகும். சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுதல் தொடர்பான அதிக அளவு ஆதரவுத் தளம், இலங்கையின் இன சௌஜன்யத்தைப் பாதுகாக்க எப்போதும் இன்றியமையாததாகும். ■



## மா. கிருஷ்ணன் (1912-1996)

# காலத்தை வென்ற ஒரு மனிதன்

### சுதந்திர வைராக்கியத்துடன், இயற்கையை நேசித்து, செல்வத்தைவிட சீலத்தை மதித்தவர்

ராஜ். கௌதமன்

**1970**களில் தமிழில் நாவல் இலக்கியம் தோன்றினாலும், சமூக - யதார்த்த நாவல்கள் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் தோற்றம்பெற்றன. இதற்குக் காரணமான நவீன படைப்பாளிகளில் இராஜமையரும் மாதவையாவும் முக்கியமானவர்கள். அ. மாதவையா மூன்று தமிழ் நாவல்களையும் நான்கு ஆங்கில நாவல்களையும் படைத்தவர். அரசாங்க இலாகாவில் உயர்பதவி வகித்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமையானவர். பாரதியார், ஈ. வே. இராமசாமிநாயக்கர், அயோத்திதாச பண்டிதர் ஆகிய பெருஞ் சிந்தனை, மற்றும் செயல்பாட்டாளர்களின் சமகாலத்தவர். 'தமிழ் நேசன்' பத்திரிகையில் பெரும்பங்கு வகித்தவர். உத்தியோகத்திலிருந்து விருப்ப ஓய்வுபெற்று, 'பஞ்சாமிர்தம்' பத்திரிகையையும் சொந்த வெளியீட்டகத்தையும் (*The Authors Publishing House*) தொடங்கி நடாத்தி, 1925இல் அகால மரணமடைந்தார். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றத்தில் அதன் உறுப்பினர் என்ற தகுதியில் தமிழ்மொழிப் பாடம்பற்றி உரையாற்றியபோது, மூளையில் இரத்த நாளம் வெடித்துக் கசிந்ததால் அந்த அகால மரணம் ஏற்பட்டது.

மாதவையாவுக்கு முதல் ஐந்தும் பெண் குழந்தைகள். அவர்களில் ஒருவர் லக்ஷ்மி. இவர், தந்தை மரணத்தின்பின் லண்டனிலிருந்துவந்து மைலாப்பூரில் தந்தை கட்டிய வீட்டில் கடைசித் தம்பியைக் கவனித்துவந்தார்; ராணிமேரி கல்லூரி முதல்வராக பணிபுரிந்தார். மற்ற பெண்குழந்தைகளில் ஒருவர் பெங்களூரில் குடித்தனம் நடத்தினார். மற்றைய பெண்குழந்தைகளைப்பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. (அமெரிக்க குடிமக்களாக ஆகியிருக்கலாம்.)


மாதவையாவின் கடைசி மூன்றும் ஆண் குழந்தைகள். அவர்களில் கடைசி (எட்டாவது) குழந்தைதான் கிருஷ்ணன். இவருக்குப் பன்னிரண்டு வயது நடக்கும்போதுதான் மாதவையா காலமானார். அக்காலத்தில், திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்த வசதியான நிலவுடைமையாளர்களான பிராமண, வேளாள, சமீந்தார் (மறவர்) வீட்டுப் பிள்ளைகளைப்போல, ஸ்ரீவைகுண்டம் தாலுகா, சிறுகுளத்தில் பிறந்த கிருஷ்ணனும் திருநெல்வேலி இந்துக் கலாசாலையில் உயர் நிலைப் பள்ளிக் கல்வியை முடித்து, மைலாப்பூரில் தந்தை வீட்டில் தமது தமக்கை லக்ஷ்மியின் பராமரிப்பில், 1927இல் பிரசிடென்சி கல்லூரியில் சேர்ந்து, 1931இல் பீ. ஏ. பட்டம் பெற்றார். தந்தை மற்றும் இரண்டு பெரியப்பாக்களைப் போலவே இவருக்கும் படிப்பில் அத்தனை ஈடுபாடில்லை. இவருடைய ஈடுபாடு, அன்றைய கல்வி வட்டாரத்திற்கு வெளியே லயித்திருந்தது. இயற்கை, வனவிலங்கு, தாவரங்கள், புகைப்படம் ஆகியவற்றை நேசித்தார். தமது வாழ்நாளை இந்த நேசத்தில் மிகுந்த சந்தோஷத்தோடு செலவிட்டார். விதேசி மரங்களை சுதேச மண்ணில் வளர்ப்பதை எதிர்த்தார். பள்ளி, கல்லூரிகளில் அவர் கற்றது ஈடுபாடற்ற கல்வி என்றுதான் சொல்லவேண்டும். ஆங்கிலேய கல்வி முறை - நான்கு சுவர்களுக்குள் அடைபட்டு மனப்பாடம் பண்ணுகிற முறை - அவருக்குப் பிடிக்கவில்லை. சுதந்திரமாக வனங்களைச் சுற்றித்திரிந்து, செடிகொடிகள், மரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றை ஆய்வுசெய்தார். இந்த பூமி மானிடர்க்கு மட்டும் சொந்தம் இல்லை; தாவரங்கள், பறவைகள், வனவிலங்குகள் ஆகிய எல்லா உயிரினங்களுக்கும் சொந்தம் என்பது அவரது கொள்கை, கோட்பாடு. இவ்விஷயத்திலும்சரி, பொதுவாக அவர் ஏற்றுக்கொண்டிருந்த எல்லா விஷயங்களிலும்சரி படு பிடிவாதக்காரராக இருந்தார். தமது கொள்கைக்கு ஒத்துவராத அமைப்புக்களிலிருந்து வலியவந்த கௌரவங்களையும், அயல்நாட்டு அழைப்புக்களையும் நிராகரித்திட அவர் தயங்கியதில்லை. 'சுதந்திர' இந்திய சர்க்கார் வழங்கிய பத்மஸ்ரீ பட்டத்தை அவர் ஏற்றுக்கொண்டதிலும் வியப்பில்லை.

கல்லூரியிலன்றி, ஃபைசன் என்ற பேராசிரியரிடம் தாவரவியலைக் கற்றறிந்தார். அவரோடு நீலகிரி, கொடைக்



மா. கிருஷ்ணன் ஓவியம் - குளிர் காலம்

மா. கிருஷ்ணன்



கானல் ஆகிய மலைப்பிரதேசங்களுக்கு கள ஆய்வுசெய்ய சுற்றி அலைந்தபோது, நேர்முகமாக தாவரங்களை அறிந்து கற்றார். ஃபைஸனுடைய மனைவியிடம் 'வாட்டர்கலர்' ஓவியம் தீட்டும் நுட்பங்களைக் கற்றறிந்தார். கிருஷ்ணனின் முயற்சிகளைப் பாராட்டினாலும், அவர் மிகவும் கொடுத்து வைத்தவர்தான். தகப்பனாரின் கண்டிப்பு என்ற முள்வேலி அவருக்கு இருக்கவில்லை. (மாதவையா உயிரோடு இருந்திருந்தால் கிருஷ்ணனின் 'சுதந்திரமான' போக்கினை எப்படி எடுத்துக் கொண்டிருப்பாரோ?)

கிருஷ்ணன் சிறந்த வனவிலங்கு நிபுணர்; புகைப்படக் கலைஞர். புகைப்படத்தில் கறுப்பு - வெள்ளை படம் எடுப்பதுதான் அவருக்குப் பிடிக்கும். புகைப்படக்கருவி (கமெரா) கூட எந்திரத்தனமாக இருக்கக்கூடாது என்று, வாங்கிய கமெராவில் தமது கருத்து, நோக்கம், ரசனை ஆகியவற்றைப் பதிவுசெய்கிறமாதிரி தாமாகவே அதில் திருத்தங்கள், சேர்க்கைகள் செய்தார். நாகரிக நடைக்காக (*fashion*) புதிய கருவிகளை வாங்கமாட்டார்.

இப்படி ஒரு 'பிரகஸ்பதி'க்கு யார் வேலை கொடுப்பார்? 1942இல் கர்நாடகத்தில் இருந்த சந்தூர் சமஸ்தான மகாராஜாவிடமிருந்து வேலை தேடிவந்தது. கிருஷ்ணன் ஒப்புக்கொண்டார். நாலைந்துபேர் பார்க்கவேண்டிய வேலை அது. பள்ளியாசிரியர், நீதிபதி, பொதுசனத் தொடர்பு அதிகாரி, மகாராஜாவின் அரசியல் செயலர் ஆகியோர் செய்கிற வேலை. சந்தூர் சமஸ்தானத்தின் வனப்பகுதிகளைச் சுற்றிப் பார்க்க அந்த வேலை வாய்ப்பாக இருந்தது. விரைவில் அவருக்கும் சமஸ்தானத்துக்கும் ஒத்துப்போகாததால் வேலையைவிட்டு வெளியேறினார். இச்சம்பவம், சந்தூர் சமஸ்தானம் 1949இல் இந்திய குடியரசோடு இணைந்தபின் நடந்தது. அப்போது நாட்டின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவுக்கு சமஸ்தான நிலைமைபற்றி ஒரு கடிதம் எழுதினார். அதற்குப்பிறகு, இனி எந்தக் காலத்திலும் அடுத்தவனுக்கு வேலையாளாகச் சேர்ந்து ஜீவனம் நடத்தமுடியாதென்று வைராக்கியம்பூண்டு, 1996ஆம் ஆண்டில் தாம் காலமாகும் வரை சொந்தமாக (*freelance*) தமது திறமையின் மூலமாக வாழ்ந்தார்.

கல்கத்தாவிலிருந்து வந்த *`The Statesman'* பத்திரிகையில் 1950முதல் தொடர்ந்து நாற்பத்தாறு ஆண்டுகளாக, தமது மரணம்வரை *`Country Note Book'* என்ற தலைப்பில் பத்தி எழுதிவந்தார். இயற்கை வரலாறுபற்றி இதில் எழுதினார். அவர் சமஸ்தானத்தில் பணிபுரிந்தபோது சுற்றியிருந்த காடுகளில் வாழ்ந்த சீவராசிகளைப்பற்றி புகைப்படங்களுடன் *`Wildlife Photographers Diary'* என்ற தலைப்பில் *The Illustrated Weekly of India* இதழில் தொடராக எழுதிவந்தார். *`Z'* என்ற புனைபெயரில் *`The Hindu`* இதழில் எழுதிவந்தார்.

இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டபடி வனவிலங்கு, பறவைகள் சரணாலயங்களை வடிவமைத்துக்கொடுத்தார். வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் சரணாலயத்தின் கட்டமைப்பிற்கு காரணமானவர் கிருஷ்ணனே.

1972ஆம் ஆண்டில் கிருஷ்ணன், மாந்தர்தம் காதுகளால் கேட்டுணரவியலாத ஒலிகளைக்கொண்டு யானைகள் தங்களுக்குள் தொடர்புகொள்ளும் சாத்தியப்பாடுபற்றி கண்டறிந்திருந்தார். இதனை, பின்னர் வந்த ஆய்வாளரான *Katherine Payne* 'நீச்ச ஒலி' (*infrasound*) என்று உறுதிசெய்தார் (1999).

(இதுவரை தரப்பட்ட தகவல்கள் கணினி ஊடுவலையில் பார்த்தவை. இதற்குப் பொறுப்பானவர்களுக்கு நன்றி. இத் தகவல்களோடு, நானறிந்த வேறு விஷயங்களும் இணைத்துத் தரப்பட்டுள்ளன. கிருஷ்ணனோடு நேரில் விவாதித்தவை ஒரு சில நாள்களே என்பதாலும், பேசும்போது குறிப்பெடுக்கக் கூடாது என்று அவர் தடையுத்தரவு போட்டதாலும், நினைவிலிருந்து சிறுசிறு தகவல்களாக மனம்போன போக்கில் அவர் உரையாடியதாலும் முழுமையாக, விவரப்பிழையில்லாமல் ஞாபகப்படுத்திட என்னால் முடியவில்லை. தொடரும் பகுதியில் அவரைப்பற்றி நேர்முகமாக நான் அறிந்தவையும் அநுபவங்களும் இடம்பெறுகின்றன.)



மா. கிருஷ்ணன் புகைப்படங்கள்

அ. மாதவையாவின் மூதாதையர்கள் ஆந்திராவிலிருந்து தென் தமிழகத்தில் - குறிப்பாக தாமிரபரணி ஆற்றுப்படுக்கையின் மென்புலப் பகுதிகளில் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்குமுன் குடிபெயர்ந்து வந்தார்கள். 1400இன் தொடக்கத்தில் வடக்கிலிருந்துவந்த முகலாய படையெடுப்பால் விஜய நகர சாம்ராஜ்யம் சரிவுற்ற காலகட்டத்தில் ஆந்திரர்கள் மிகப்பெரிய அளவில் வட தமிழகம், மதுரை, திருநெல்வேலி, மலையடி கிராமங்களில் (கால்நடை மேய்ச்சல் நிலப்பரப்பு) தமிழகத்திற்குக் குடிபெயர்ந்தார்கள்.

மாதவையாவின் குடும்பத்தின் முந்திய மூன்று தலைமு





**‘பெரும் சிந்தனையாளர்கள்,
எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும்
வாழ்ந்தாலும்,
ஒரேமாதிரி சிந்திக்கிறார்கள்’ என்ற கருத்தை
மா. கிருஷ்ணன் மாற்றிக்கொள்ளவே இல்லை!**

**வாழ்க புதல்வர்களுடைய தந்தைப் பாசம்!**

றையினர் சிறுகுளம் கிராமத்தில் பெரும் நிலவுடைமைக்காரர்களாக வளர்ந்திருந்தார்கள். மாதவையாவின் தந்தை அனந்தநாராயணையருக்குப் பிறந்த மூன்று மகன்களில் மாதவையாவின் மற்ற இரு சகோதரர்களில் ஒருவர், ஆங்கிலமுறை மருத்துவர், மற்றவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகி ஓய்வுபெற்றவர். மாதவையா உப்பு சுங்க இலாகாவில் துணை கமிஷனராக வேலைபார்த்து விருப்பு ஓய்வு பெற்றார். இவர்களும் இவர்களையொத்த பிராமண, வேளாள இளைஞர்களும் 1835இல் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வி முறையில் படித்து பீ. ஏ., எம். ஏ. பட்டம்பெற்று கம்பனி ஆட்சியிலும், பிறகு பிரிட்டிஷ் மகாராணியின் நேரடி ஆட்சியிலும் உயர் உத்தியோகம்பார்த்துச் சம்பாதித்த உயர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களானார்கள்.

மாதவையாவுக்கு எட்டு குழந்தைகள் இருந்தாலும் லக்ஷ்மி, கிருஷ்ணன் ஆகிய இரண்டுபேரைப்பற்றி ராணிமேரி கல்லூரிக்கும், வனவிலங்கு ஆய்வாளர்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த இருவரும் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நிர்ணயித்துக்கொண்டார்கள். வேலைபார்த்து ஜீவிப்பதற்காக அல்லாமல், நவீன உலக அறிவும் ஆற்றலும் பெறுவதற்காக மாதவையா லக்ஷ்மியை ஆங்கிலக் கல்வி கற்கவைத்தார். நாவலில் அவர் எழுதியதுபோல, சொந்த வாழ்க்கையில் படித்துப் பண்பட்டுச் சுதந்திரமும் சமத்துவமும் ஒழுக்கமும் பேணிய பிராமண கன்னிகைகளை அச்சம், நாணம், மடமை, மூடத்தனம், அடிமைத்தனம் மிக்க இந்துத் தந்தை (கணவன்) ஆட்சிமுறைச் சமுதாயம் கொடூரமாக நசுக்கியது. ராஜாஜி ஏற்பாடுசெய்த பிராமண வரனுக்கு மாதவையா தம்முடைய படித்த மகளைத் தாரைவார்த்துக் கொடுத்தது, கிளியை வளர்த்துப் பூனையிடம் ஒப்படைத்த கதையாகிவிடவே, மாதவையா தம் மகளை லண்டனுக்கு அனுப்பி உயர் கல்வி கற்க வழிசெய்தார். இந்தத் துணிச்சலும் சுயாதீனமும் மாதவையா குடும்பத்தின் சொத்தாக இருந்தன. லண்டன் சென்ற மகள் ஓய்வு வாங்கியபின் தந்தை நடத்திய ‘பஞ்சாமிர்தம்’ இதழில் லண்டன்பற்றி தொடர்ந்து வியாசங்கள் எழுதினார்.

கிருஷ்ணன் மரியாதைக் குறைவாக யாரையும் பேசுவதில்லை. ஆனால், தமது கொள்கையை யாருக்காகவும் விட்டுக்கொடுக்காதவர்; பிடிவாதம் கொண்டவர். மாணவப் பருவத்தில் ‘திருட்டுத்’ தனமாக சிகரெட் பிடித்த கிருஷ்ணன், இப்

போது சார்மினார் சிகரெட்டை உதட்டிலிருந்து எடுப்ப தில்லை என்று மிகைபடக் கூறும் அளவுக்கு ஊதித்தள்ளி னார்.

நான் சந்தித்தபோது கிருஷ்ணனுக்கு எழுபத்தொன்பது வயது. ஆள், சராசரி உயரத்திற்கும் கூடுதலாக வளர்ந்திருப் பார். அதற்கு ஏற்ற அளவான உடல்வாகு. வீட்டில் அவர் உடுத்தும் ஆடை வேஷ்டி மட்டுமே. மற்றபடி, முழு வெற்று டம்புதான். அவரோடு பேசுவது உட்கார்ந்தபடி. இடத்தை அடைக்கின்ற நாற்காலி, மேசை வகையறாக்களும் தட்டு முட்டுச் சாமான்களும் இல்லை. அந்த அறையின் உள்ள ரங்க அமைப்பு, கூரை ஆகியவற்றை கோட்டோவியமாக வரைந்துதரும்படி வெள்ளைக்காரப் பெண்மணி ஒருவர் கேட்டு கடிதம் எழுதியிருந்ததாகச் சொல்லி, அந்தப் படத் தைக் காட்டினார். அசாத்தியமான திறமை என்றுதான் கூற வேண்டும். இந்த வயதில் கைநடுக்கமில்லாமல் ஓவியம் வரை வதும், புகைப்படம் எடுப்பதும், கைபட கட்டுரைகள், கடி தங்கள் எழுதுவதும் நினைத்துப்பார்க்க முடியாதது.

மைலாப்பூர், ராதாகிருஷ்ணன் சாலையிலிருந்த மாத வையாவின் வீடு தக்க பாராமரிப்பு இல்லாமல் ஒரு பகுதி சிதைந்துவிட்டது. கிருஷ்ணன் தமது சொந்த சம்பாத்தியத் தில் வாழ்ந்துவந்தார். மாதவையாவின் வாரிசுகள் தற்போது அமெரிக்க குடிமக்கள்; தமிழ் தெரியாது. அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று மாதவையாபற்றி ஒரு சிறு நூலை எழுதி, நாற்பது பிரதிகள் எடுத்து அவர்களுக்கு அனுப்பும் தமது திட்டம்பற்றி ஒருநாள் குறிப்பிட்டார். மாதவையா பற்றி தவறான தகவல்களைத் திருத்துவது நோக்கம் என்பது புரிந்தது. மாதவையாபற்றிய குடும்பார்த்தமான அந்தரங்க விஷயங்களைப்பற்றித் தம்மால் கூற இயலாதென்று முதலி லேயே கரைகட்டிவிட்டார். எனக்கு அவை தேவைப்பட வில்லை. பார்க்கப்போனால், கிருஷ்ணனைவிட மாதவையா என்ற படைப்பாளி - எழுத்தாளர் - சமூக சீர்திருத்தக்காரர் பற்றி எனக்கு அதிகமான தரவுகள் தெரியும்.

இதர ஆஷாடபூதி பிராமணர்கள், முதலில் ஆங்கில மொழியை 'நீச பாஷை' என்று கூறிவிட்டு, பிறகு சொந்த இலாபத்தின் பொருட்டு அதனை 'ராஜ பாஷை' எனப் போற் றிய குண்டல தீக்ஷிதர் ஆத்துப் பிராமணர்கள் ஆகியவர்க ளையும், 'வேளைக்குத் தக்க வேஷம்' போடுகிறவர்களையும் போல மாதவையா தமது வாழ்க்கையை அமைத்துக்கொள் ளவில்லை. அவர் வீட்டிற்குவந்து உரையாடியவர்களும், பழ கியவர்களும் ஏறத்தாழ அவரைப்போன்ற கனவான்கள் என்றே குறிப்பிடவேண்டும். ஏறத்தாழ கிருஷ்ணனும் இவ்வி ஷயத்தில் தந்தையைப் போன்றவரே.

மாதவையா தாம் பிறந்துவளர்ந்த இந்து சமூகத்தில் மக் கிப்போயிருந்த மூடத்தனமான துராசாரங்களை நீக்கி, நவீன அறிவியல், ஒழுக்கம், சதாசாரம் மிகுந்த ஓர் இலட்சிய சமூக மாக அதனை மாற்றுவதற்காக தமது அறிவுப் பணியை மேற் கொண்டார். இவரது எழுத்துக்களின் ஒட்டுமொத்த இலட் சியமே இதுதான். 1850 காலகட்டத்திலிருந்து, சுதேச அரசி யல் இயக்கம் தலையெடுக்கும்வரை ஆசார சீர்திருத்தம் என் னும் சமூக அகமாற்றம், படித்த இந்துக்களுடைய நோக்க மாக இருந்தது. மாதவையா இவ்விஷயத்தில் தமது பிள்ளை களை வளர்த்தார். தமது நோக்கத்திற்கு பகுத்தறிவு சார்ந்த நாத்திக கருத்துக்கள் சரியானதென்றால் அவற்றை ஏற்க தயங் கவில்லை. வெறித்தனமான - மூடத்தனமான ஆத்திகராக அவர் ஒருபோதும் இருந்ததில்லை. கிருஷ்ணனும் அப்படித் தான்.



புகைப்படம் - கோடை வெளிச்சம்



**மாந்தர்தம் காதுகளால் கேட்டுணரவியலாத ஒலிகளைக்கொண்டு யானைகள் தங்களுக்குள் தொடர்புகொள்ளும் சாத்தியப்பாடுபற்றி கண்டறிந்திருந்தார்**

அ. மாதவையா தமிழ்கூறு நல்லுலகம் அறிந்து போற்றிய தமிழ் நாவவலின் முன்னோடிகளில் ஒருவர்; எழுத்து - படைப்பு ஆற்றல் மிகுந்தவர்; ஆசார சீர்திருத்தக்காரர்; அரசுத்துறை அதிகாரி. அவருடைய கடைசிப் புதல்வர் கிருஷ்ணன், இந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் பேசப்பட்ட வன உயிர்கள் பற்றிய அறிவியலாளர்; வன உயிர் புகைப்பட நிபுணர்; ஓவியர்; இளம் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டிய நெறியாளர்; பத்திரிகை எழுத்தாளர்; இயற்கையை நேசித்த மனிதர்; புகழைத்தேடி அலைந்தவர் இல்லை. என்றாலும், புகழ் அவரைத் தேடிவந்தது. மனதிற்கு உடன்பாடற்றவற்றை - அவை எவ்வளவு பிரபல்யத்தைத் தரக்கூடியவையானாலும் ஒருபோதும் ஏற்றவர் இல்லை; செல்வத்தைவிட சீலத்தை மதித்தவர். எதற்கும் யாருக்கும் வளைந்துகொடுக்காதவர். மன உரம்படைத்த சுதந்திரப் பிரியர். உதவி என்று தம்மை நாடிவந்தவருடைய கோரிக்கை சரியெனப்பட்டால் கைம்மாறு கருதாமல் உதவுபவர். காலந்தவறாமை; கொடுத்த வாக்கை மீறாமை; ஒளிவு மறைவற்ற நேரடியான பேச்சு. யாரையும் மிகப் பெரியவர் என்று வியக்கமாட்டார்; சிறியவர் என்று யாரையும் இகழவும் மாட்டார். (கண்ணியன் பூங்கொன்றன்: 'புறநானூறு')

ஒருமுறை மாதவையாவின் படைப்புபற்றி அவரோடு பேசிக்கொண்ருந்தபோது தொலைபேசி அழைத்தது. கிருஷ்ணன் இரண்டொரு வார்த்தைகளை ஆங்கிலத்தில் பேசிவிட்டு 'ரிசீவரை' வைத்தார். 'இந்த ஆஸ்திரேலியக்காரனுக்கு வேலையில்லை. லாட்ஜில் ரூம் போட்டிருக்கிறானாம். வன விலங்குபற்றி விவாதிக்க உடனே வரலாமா என்று அரிக்கிறான். இதற்கு இவன் முன்கூட்டியே என் அனுமதியை வாங்கியிருக்கவேண்டும். அவன் நாட்டில், முன்அனுமதி பெறாமல் ஒருவரை உடனே பார்த்து ஆலோசிக்க முடியுமா?' என்று சொன்னார். நல்லவேளை, நான் என் நெறியாளர் வழியாக இவருடைய உறவுக்கார பெண் உதவியால் முன்அனுமதி பெற்றிருந்தேன்!

அவரிடம் ஆலோசனை கேட்டு வருபவர்களை மத்தியானம் தம்மோடு தமது உணவு அறையில் சாப்பிடச் சொல்லுவது அவருடைய வழக்கம் என்று தெரிந்தது. அவருடைய வயதான சம்சாரம் உணவு பரிமாறுவதற்குத் தயாராக நின்றுகொண்டிருந்தார். இந்த விஷயம் அவர் சம்சாரத்திற்கு சம்மதமா அல்லது இவரிடம் கிருஷ்ணன் சம்மதம் கேட்டாரா என்பதை அந்த அம்மா முகத்தைப் பார்த்து ஊகிக்கமுடியவில்லை. இப்படியே பரிமாறிப் பழகிவிட்டவர்போலத் தெரிந்தது. ஒரு மரியாதைக்காக வெளியிலேயே சாப்பிட்டுக் கொள்ளுவதாக கூறியும் அவர் விடவில்லை. வேலைக்காரப் பெண்ணை அனுப்பி, மிலிட்டரி ஹோட்டலில் வாங்கிவரச் சொல்லுவதாக ஒரு போடுபோட்டார். அவருடைய சம்சாரம் இந்த ஏற்பாட்டின் நிதர்சனம்பற்றி என்னை நினைக்கிறார்கள் என்பதறிய, அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கும் தைரியம் எனக்கில்லை!

ஒருநாள் மாதவையாபற்றி நான் வைத்த விமர்சனம் எனக்கும் அவருக்கும் இடையில் பெரும் விவாதத்தைக் கிளப்பிவிட்டது. 1898ஆம்ஆண்டில் மாதவையா 'பத்மாவதி சரித்திரம்' நாவலை வெளியிட்டார். இதன் இரண்டாம் பாகம் ஒன்றை எழுதும் உத்தேசம் அவருக்கு இருந்தது. முதல் பாகத்தில், மாதவையாமீது தாக்கம் செய்த *W. M.* தாக்கரே என்ற விக்டோரியா கால ஆங்கில யதார்த்த நாவலாசிரியருடைய பாதிப்புகளைத் தெளிவாகக் காண இயலும். தாக்கரேயின் பெயரைக் குறிப்பிடாமலே அவரது நாவல் கூறுகளையும், சிந்தனைகளையும் மாதவையா முதல் பாகத்தில் தமிழாக்கம் செய்துள்ளார். குறிப்பாக, தாக்கரேயுடைய *'The History of Pendennis'* நாவல் பகுதிகள் பலவற்றைத் தமிழ்க் கலாசாரத்திற்கு ஒத்தவாறு மாற்றி மொழிபெயர்த்துள்ளார். குழந்தைகள் எழுதும் பிழையான கடிதங்கள்; வளரிளம் பருவ விடலைப்பருவத்து ஆணுக்கு மாற்றுப் பால்மீது ஏற்படுகிற கற்பனையும், கனவும், மயக்கமும் நிரம்பிய ஒருதலைக் காமம்; மாந்தர் கூடிவாழ்ந்தாலும், ஒவ்வொருவரும் தனித்தீவைப் போன்றவர்கள் ஆகிய விஷயங்களைத் தமிழ்ப்படுத்தித் தந்துள்ளார். *'Lead Kindly Light'* என்ற புகழ்பெற்ற அறநெறிப் பாடலை தமிழாக்கித் தந்துள்ளார். மாதவையாவின் மேற்படி நாவலின் தமிழ் நடையில் மொழிபெயர்ப்பின் சாயல் இருப்பதாக அன்று வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியும், ஃப்ரெடரிக் ஹரிஸனும் மதிப்புரை வழங்கியிருந்தார்கள்.

இவ்வாறு, மறுக்கமுடியாத அகச்சான்றுகளை நான்

முன்வைத்ததும் கிருஷ்ணனுடைய முகத்தில் அதிருப்தியின் ரேகைகள் படர்ந்தன. மாதவையாவின் மகனால் இந்த விமர்சனத்தை ஏற்கமுடியவில்லை. இது, மாதவையாவின்மீது சுமத்துகிற குற்றச்சாட்டில்லை. அந்நாள்வரை செந்தரப்பட்ட உரைநடையில் இலக்கியத் தகுதிவாய்ந்த இலக்கியம் படைக்கப்பட்டிருக்கவில்லை; அப்படிப் படைக்கப்பட்டாலும் அதனை இலக்கியம் என பண்டிதர்கள் ஒப்பியதில்லை. இதனால்தான், தமிழின் முதல் நாவல் (விதவை மறுமணம் பற்றியது) உரைநடையிலன்றிச் செய்யுளில் யாக்கப்பட்டது. ('ஆதியூர் அவதானி' என்ற புனைபெயரில் சேஷையங்காருடைய விதவை மகளுக்கு நாகர்கோவிலில் மறுமணம் செய்வித்ததையொட்டி எழுந்த உண்மை நிகழ்ச்சிகளை அடியொற்றி புனையப்பட்டது.) தனிமனிதன், சுதந்திரம், நவீனத்துவ வாழ்க்கைமுறை, நடுத்தர வர்க்கத்தின் மதிப்பீடுகள் ஆகிய மாற்றங்களை, நூதனமான யதார்த்த நடையில் வசனத்தில் எழுதிய மாதவையா ஒரு பெரும் முன்னோடி என்ற உண்மை, அவரது முதல் முயற்சியில் காணப்பட்ட சில பல வீனங்களால் மறைக்கவோ மாற்றவோபட முடியாது. நான் எவ்வளவு முயன்றும் அவர் ஒப்பவில்லை. 'பெரும் சிந்தனையாளர்கள் எங்கிருந்தாலும் ஒரேமாதிரி சிந்திக்கிறார்கள்' என்று இவருடைய உறவினர் பெ. நா. அப்புசாமி 'தமிழ் நேசன்' இதழில் மேற்கோளிட்ட பழமொழியை மட்டும் காட்டி, தம்முடைய தந்தையாரைக் காத்திட முனைந்தார். வாழ்க புதல்வர்களுடைய தந்தைப் பாசம்! அதன்பிறகு, இவ்விஷயம்பற்றி நான் மூச்சுவிடவில்லை. சங்கடமான மௌனம் சிறிதுநேரம் நீடித்தது. நான் விடைபெற்றபோது, சரி என்றார்.

சரி, இதோடு எல்லாம் முடிந்துவிட்டது என்ற கடுப்போடு பாண்டிச்சேரி போய்ச்சேர்ந்தேன். மனமும் வயிறும் வற்றி உலர்ந்துபோயிருந்தன. ஒரு 'பீரை'க் குடித்து ஆற்றினேன். ஆய்வைக் கொஞ்சநாள்களாக மூட்டைகட்டிப் போட்டேன். ஓரிரு மாதங்கள் சென்றன. இதற்கிடையில் ஈடு செய்யமுடியாத தனிப்பட்ட இழப்பின் அடியால் ஸ்மரணையின்றிப்போனேன். சென்னைக்குப் போகும் எண்ணம் தொலைந்து போனது. தனிப்பட்ட சோகத்தில் அழிந்து கொண்டிருந்த அப்போது கிருஷ்ணனின் கடிதம் வந்தது. தூக்கம் கலைந்ததுபோலிருந்தது. நான் அவரை வந்து பார்க்காமலிருப்பதற்கு எனக்கு ஏதாவது தனிப்பட்ட இழப்பு ஏற்பட்டிருக்குமோ என்று ஐயப்பட்டிருந்தார். இது வியப்பாக இருந்தது.

மனதைக் கொஞ்சம் வெளியுலகிற்கு இட்டுவரலாமென்று மைலாப்பூர் சென்றேன். வழக்கமாக அந்த மரத்தடியில் சங்கிலியால் கட்டுண்ட கோம்பை நாய் வெறிபிடித்தமாதிரி குலைத்துச் சீறிப் பாய்ந்தது. சங்கிலியால் அது கட்டப்பட்டிருப்பது தெரிந்தாலும் ஒரு நிமிடம் நடுங்கிப்போனேன்.

என் முகத்தின் வாடலைப் பார்த்ததும் அவர் முகம் மாறியது. என்னால் எதையும் பேசமுடியவில்லை. அவர்தான் விடாமல் பேசினார். கடைசியில், விஷம் குடிக்கிற வேகத்தில் என் இழப்பைப்பற்றிச் சொன்னேன். ஏன் எப்படி என்று ஒரு சில வினாக்களை எழுப்பிவிட்டு, மாதவையாபற்றி தொடர்ந்தார். அந்த இரத்தினச் சுருக்கம் எனக்கு இதமாக இருந்தது.

அவர் முன்னொரு நாள் சொன்னபடி அவருடைய குடும்பத்தார்க்கு மாதவையா பற்றித் தயாரித்த குடும்ப வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதி, நாற்பது படிகள் தயாரித்திருந்தார். இதில் ஒரு பிரதியை எனக்குத் தந்தார். இந்த நூலை நான் அவர் காலத்திற்குப் பிறகும்கூட, ஆய்வு நோக்கத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாமேயன்றி, ஆய்வேட்டிலோ, வேறு பத்திரிகையிலோ வெளியிடக்கூடாது என்று உறுதிமொழி வாங்கிக்கொண்டார். (அந்தப் பிரதி என்னிடம் பத்திரமாக இருக்கிறது. எனது வினாநிரலைத் தாமே ஓவியம் போல எழுதி, அதற்குரிய பதில்களையும் எழுதி அவர் தந்த பிரதி ஒன்று ஆய்வேட்டின் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. அவர் தந்த குடும்ப வரலாறுபற்றிய பிரதியை தியோடர் பாஸ்கரன் 'காலச்சுவடு' இதழில் தமிழாக்கம் செய்து வெளியிட்டதை இவரால் தடுக்கமுடியவில்லை!)

கிருஷ்ணன் தமது வனவிலங்குகள் ஆய்வுபற்றியும், அவைகுறித்த புகைப்படத் தொகுப்பு நூலைப்பற்றியும் அவ்வப்போது இலேசாகக் குறிப்பிடுவார். யானைகளுடைய வாழ்க்கை முறைகளைப்பற்றி ஆலோசனை கேட்டுவரும் ஆய்வாளர்களைக் காட்டுக்கு இட்டுச்சென்று, இரவில் தங்குவதற்கு மரக் கிளைகளில் குடிசைகட்டும் விதம்பற்றிக் கூறி, இரவில் வனவிலங்குகளைப் படம் எடுக்கும் முறைபற்றிப் பயிற்சியளிப்பாராம். தாமே தயாரித்துத் தொகுத்த வனவிலங்குகளைப் பற்றிய புகைப்படத் தொகுப்பு நூலைக் குறிப்புகளோடு அமெரிக்க புத்தக கம்பனி ஒன்று வெளியிட்டதற்கு 'ராயல்டி'யாக அனுப்பிய டாலரில் செய்த தேக்குமர அலமாரியைக் காட்டினார். அதில் என்ன நூதனம் என்று எனக்கு புரியவில்லை. அந்தத் தேக்கு மரப் பலகைகள் தனித்தனியானவைகளை ஒட்டுப்போட்டுத் தயாரித்தவை அல்ல. அகலமான ஒரே துண்டில் கதவுகள் செய்யப்பட்ட, ரங்கூன் தேக்கு என்று சொன்னார். அப்போதுதான் அலமாரியின் விசேஷம் தெரிந்தது. இவ்வளவு பெரிய அகலமான தேக்கு மரங்களை இனிமேல் காணமுடியாதென்பது நிச்சயம். நான் சென்றிருந்த அன்று, தமது நூலின் இரண்டாம் பதிப்பிற்குரிய ராயல்டி பணம் ஆறாயிரம் டாலருக்கு காசோலை வந்ததாக வியந்து கூறினார். இந்திய பதிப்பகங்கள் இவ்வளவு தருமோ என்பது சந்தேகம். நூலாசிரியனிடம் நூலை வெளியிட பணம் கேட்டாலும் கேட்பார்கள்!

எனக்குத் தருவதற்கு மாதவையாவின் 'விஜயமார்த்தாண்டம்' (1903) நாவலையும், 'குசிகர் குட்டிக் கதைகள்' இரண்டு தொகுப்புக்களும் தவிர, வேறு இல்லை என்றார். எனக்கு முன் மாதவையாபற்றி ஆய்வுசெய்தவருக்கு எல்லாம் கொடுத்தது போக, மற்றவை எல்லாம் மழைநீர்க் கசிவால் ஈரமாகி மக்கிக் கறையான்களுக்கு உணவாகிவிட்டதாகச் சொன்னார்.

மா. கிருஷ்ணன் தமது தந்தையைப்போல ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதும் புலமை பெற்றிருந்தார். இனி என்றும் சந்தக்கமுடியாத கண்ணியம் மிக்க ஒரு கனவானுடைய மரபின் கடைசிக் கொழுந்தாக விளங்கினார். இவர்களுக்குத் தாய்மொழி, பிறப்பின் காரணமாக தெலுங்காக இருந்தாலும், படித்ததும், படைத்ததும், பழகியதும் ஆங்கிலத்திலும் தமிழிலும் என்பதை நோக்கும்போது அதிசயமாக இருக்கிறது. சாதி, மதம், மொழி, இனம் ஆகிய அடையாளங்களைப் பிறப்பால் பெற்ற இவர்களும், இவர்களைப்போன்றவர்களும் தங்கள் ஈடுபாட்டாலும், காலத்தின் தேவையை உணர்ந்ததாலும் இவற்றைக் கடந்துசென்றதில் வெற்றிகண்டார்கள். இவர்களைப்போன்று சொந்த உழைப்பால் புதிய தகுதியை ஈட்டியவர்களைக் காலத்தை வென்றவர்கள், கடந்து சென்றவர்கள் என்று அடித்துச் சொல்லலாம்.

மா. கிருஷ்ணன் கடைசிவரை 'மாதவையாவிடம் தாக்கரே போன்றவர்களுடைய தாக்கம் இல்லை; பெரும் சிந்தனையாளர்கள், எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் வாழ்ந்தாலும், ஒரேமாதிரி சிந்திக்கிறார்கள்' என்ற கருத்தை மாற்றிக்கொள்ளவே இல்லை! ■

# ARAS ART SCHOOL

# அரஸ் ஆர்ட் ஸ்கூல்

ஆறிலிருந்து அறுபதுவயதுவரை ஓவியம் வரைய ஆர்வமுள்ள அனைவருக்கும் ஓவியநுணுக்கங்களை ஏராளமான படங்களுடன் எளிய முறையில் கற்றுத்தரும் ஓர்அற்புதவழிகாட்டி!

## 36 ஓவிய பயிற்சிப் பாடங்களின் தொகுப்பு



ARAS ART SCHOOL
34/6 SRI GANESH FLATS
ST MARY' S ROAD
R. A. PURAM,CHENNAI
TAMILNADU,INDIA
PIN/ZIP-600028
PHONE +919940544416
+91 04424936918

பாடங்களைப்பெற...

"ARAS ART SCHOOL"என்ற பெயரில் டி.டி எடுத்து அனுப்பலாம். அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிலும் செலுத்தலாம்.

கட்டண விபரங்கள்:

British pound : £ 98
Euro : € 114
Canadian dollar : $ 153

AXIS BANK

A/C NO : 913020019432776
MICR CODE : 600211023
IFS CODE : UTIB0000676

arasoviyar@gmail.com
oviyaras@yahoo.co.in


லால்குடி ஜி. ஜெயராமன் (1930 - 2013)

# ஒரு பொற்காலத்தின் மன்னர்

**சொரூபமாய் தெரிந்த இசை**

பிங்காட்சன்





ப ல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சம்பவம் இது. வயலின் மேதை கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை நோய்வாய்ப்பட்டு, படுக்கையிலிருந்தார். அவர் மறைவதற்குச் சிலநாள்களுக்கு முன்னர், அவரைப் பார்க்க வீணை பாலசந்தர் சென்றிருந்தார். ராஜமாணிக்கம் பிள்ளையின் தலைமாட்டிலிருந்த வானொலிப் பெட்டியிலிருந்து வயலின் இசை தவழ்ந்து வந்துகொண்டிருந்தது.

"சந்துரு சார், ஜெயராமன் என்று ஒரு பையன் வாசிக்கிறான். அந்தப் பிள்ளையிடம் மூன்று அம்சங்களும் சிறப்பாக அமைந்திருக்கின்றன'' என்றார்.

வயலினில் வில் போடுவது; விரல்களால் சுரங்களை மீட்டுவது; கற்பனைத் திறன். இந்த மூன்றையும் குறிக்கும்வகையில், சைகைசெய்து காண்பித்தார்.

லால்குடி ஜெயராமனைப்பற்றி குறிப்பிடும்போது, வீணை பாலசந்தர் இந்த சம்பவத்தை என்னிடம் நினைவு கூர்ந்தார். பாலசந்தர் எவரைப்பற்றியும் எளிதில் புகழ்ந்து பெருமையாக பேசமாட்டார் என்று கேள்விப்பட்டிருந்தேன்; அந்த இசைமேதையே லால்குடி ஜெயராமனைப் புகழ்ந்தார் என்றால், அந்த கலைஞன் உண்மையிலேயே பெரும் கலைஞன் என்பதற்கு சான்று வேறு என்ன வேண்டும்?

வயலின் ஒரு மேல்நாட்டு இசைக்கருவி. அது இந்த அளவுக்கு கர்நாடக இசையின் இன்றியமையாத அங்கமாக பின்னிப் பிணைந்துகொள்ளும் என்று, அதைக் கர்நாடக இசைக்கு அறிமுகப்படுத்திய பாலுஸ்வாமி தீக்ஷிதர் எண்ணிப் பார்த்திருக்கமாட்டார்.

கர்நாடக இசையோடு வயலினை ஒருங்கிணைத்ததில் திருக்கோடிக்காவல் கிருஷ்ண ஐயர், மைசூர் சௌடையா, துவாரம் வெங்கடசாமி நாயுடு, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, மலைக்கோட்டை கோவிந்தசாமிப் பிள்ளை ஆகியோருக்கு முக்கிய பங்குண்டு. என்றாலும், வயலினுக்கு என்று தனி அந்தஸ்தையும் ரசிகர் கூட்டத்தையும் உருவாக்கியவர்கள் லால்குடி ஜெயராமன், எம். எஸ். கோபாலகிருஷ்ணன், ரி. என். கிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகள்தாம்.

லால்குடி ஜெயராமன் தன் தந்தை கோபால ஐயரிடம் பயின்றார். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜரின் குருசிஷ்ய பரம்பரையில் வந்தவர். துவக்கத்தில் மதுரை மணி ஐயர், அரியக்குடி ராமானுஜ ஐயங்கார், செம்மங்குடி சீனிவாச ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், ஆலத்தூர் சகோதரர்கள் என்ற இசை வித்தகர்களுக்கு பக்கவாத்தியம் வாசித்து, பல உயரிய இசை நுட்பங்களை அறிந்து பண்படுத்திக்கொண்டார். அவர் வாசிப்பு, பாடகர்களுக்கு இடைஞ்சல் இன்றி, அநுசரணையாக இருந்ததோடு, கச்சேரிக்கு மேலும் மெருகேற்றியது. அப்பொழுதெல்லாம் வயலின் 'சோலோ' - வயலின் தனிக் கச்சேரி - என்று துவாரம் வெங்கடசாமி நாயுடு மாத்திரமே வாசித்துவந்தார்.

இப்பொழுது சஞ்சய் சுப்பிரமணியம், ரி. எம். கிருஷ்ணா, பம்பாய் ஜெயஸ்ரீ என்று இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது, பக்கவாத்தியம் வாசிப்பது யார் என்று எவரும் அக்கறைகாட்டுவது இல்லை. ஆனால், அப்போதெல்லாம் பக்கவாத்தியம்பற்றி கேட்டுச் செல்வோம்.

ஜி.என்.பி.என்றால்; லால்குடி வயலின், பழநி சுப்புடு மிருதங்கம்.

செம்மங்குடி: ரி. என் கிருஷ்ணன் வயலின், உமையாள்புரம் சிவராமன் மிருதங்கம்.

பாலமுரளி: எம். எஸ். கோபாலகிருஷ்ணன் வயலின்,



புதல்வர் ஜி. ஜெ. ஆர். கிருஷ்ணன், புதல்வி லால்குடி விஜயக்ஷ்மி

காரைக்குடி மணி மிருதங்கம்.

மதுரை மணி: சௌடையா வயலின், பாலக்காடு மணி ஐயர் மிருதங்கம்.

- இப்படி 'செட்' சேர்ந்துவிட்டால் கூட்டம் பெருகும்.

லால்குடி ஜெயராமன் தனது சகோதரி ஸ்ரீமதி பிரம்மானந்தத்துடன் இணைந்து நிகழ்த்திய வயலின் கச்சேரிகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. அவரிடம் ஞானமும் கற்பனைத் திறனும் மிகுந்திருந்தன. லாவகமாக வில்லை இழைக்கும் நேர்த்தியும், சுரம் பிசகாமல் விரல்களைக் கொண்டு ராகங்களைக் காட்டும் திறமும் இருந்தது. வாசிப்பு எப்போதுமே சுநாதமானது. மயங்கச் செய்யும் இழைப்பு. பாட்டின் பொருளும் உணர்வும் புரியும் வகையில் பாவம் ததும்பிநிற்கும்.

உதாரணமாக, "என்ன தவம் செய்தனை...'' என்ற காபி ராக கீர்த்தனையைக் கேட்டுப்பாருங்கள்.

யசோதை, கண்ணன் கண்முன்னே தெரிவார்கள். அந்தக் கண்ணனின் விளையாட்டை உங்களால் காணமுடியும்.

'பிரமனும் இந்திரனும் மனதில் பெருமைகொள்ள உரலில் கட்டி, வாய்பொத்திக் கெஞ்சவைத்தாய்' என்ற இடத்தில் வயலின் குழைந்து இழையும்போது, கண்ணனின் கள்ளத்தனமும், யசோதையின் பொய்க் கோபமும், கண்ணன் கைகட்டி, வாய்பொத்திக் கெஞ்சுவதும் நாடகக் காட்சி போல விரியும். ஒவ்வொரு சங்கதியும் ஒரு பாவத்தைக் காட்டும்.

'கெஞ்சவைத்தாய்...' என்னும்போது வயலின் கெஞ்சுவது போல, இறங்கி ஒலிக்கும்.

- கேட்டுப்பாருங்கள், புரியும்.

"தீராத விளையாட்டுப் பிள்ளை...'' பாரதியார் பாடலில், "கள்ளால் மயங்குவது போலே...'' என்ற வரியை இசைக்கும் போது, வயலினும் கள்ளுண்டு கிறங்கி ஒலிக்கும்; நாமும் மயங்கி நிற்போம். பாடகர்களால்கூட இத்தகைய பாவத்தைக் கொண்டுவர முடியுமா என்பது சந்தேகமே...

ஒரு கீர்த்தனையை எடுத்துக்கொண்டால் அதன் பொருளுணர்ந்து, ஆராய்ந்து பாடுவார். இவர் நன்றாகப் பாடுபவருங்கூட. அவரிடம் இசைபயின்று இன்று புகழ்பெற்று

**''பிரமனும் இந்திரனும்**
**மனதில் பெருமைகொள்ள**
**உரலில் கட்டி, வாய்பொத்தி**
**கெஞ்சவைத்தாய்...''**

**கண்ணனின் கள்ளத்தனமும்**
**யசோதையின் பொய்க் கோபமும்**
**கண்ணனின் கெஞ்சலும்**
**குழைந்து இழைகையில்,**
**அது நாடக காட்சிபோல விரியும்**



குடுமி, கடுக்கனுடன்



குடுமி போயிற்று; ஆனால், கடுக்கன்

விளங்கும் விசாகா ஹரி ஒருமுறை கூறினார்; "க்ஷீர ஸாகர சயன…'' என்ற கீர்த்தனையைப் பயிற்றுவிக்கும்போது கூறு வாராம் - "இந்த தேவகாந்தாரி ராக கீர்த்தனை, பாற்கடலில் பள்ளிகொண்ட பரமனைப்பற்றியது. எனவே, கீர்த்தனை அமைதியாக தொடங்குகிறது. சங்கதிகள் அலைகளைப் போல அடுத்தடுத்து சுழன்று பொங்கி, விரிவடையும் வகை யில் அமைந்துள்ளன'' - என்று.

இசையைக் கண்முன்னே வடிவமாகக் காட்டி, பயிற்சி அளித்தவர் அவர். அவருடைய படைப்புகளான மோகன கல்யாணி, மதுவந்தி, துவிஜாவந்திபோன்ற ராகங்களில் அமைந்த தில்லானாக்கள் இடம்பெறாத நிகழ்ச்சிகளே இல்லை எனலாம். அவருடைய மகன் ஜி. ஜே. ஆர். கிருஷ் ணன், மகள் விஜயலக்ஷ்மி, பம்பாய் ஜெயஸ்ரீ, விசாகா ஹரி, சாகேத ராமன், அகிலா சங்கர் என, பல சீடர்களை உருவாக் கியுள்ளார்.

இசை வித்தகர் ரி. என். சேஷகோபாலன் இசை உலகில் அடியெடுத்துவைத்தபோது லால்குடி, தான் சென்ற இட மெல்லாம் அவருக்கு வாய்ப்பு அளிக்கும்படி பரிந்துரை செய்து வந்ததோடு, தானே அவருக்கு பக்கவாத்தியமும் வாசித்தார். ஆனால், சேஷகோபாலன் புகழ்பெற்று பிரபல மான பின்னர் இருவரும் இணையாதது ஏமாற்றமே. மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோருக்கு அவர் அதி கம் பக்கவாதியமாக வாசிக்கவில்லை என்பதும் குறைதான்.

திருவையாறு தியாகராஜ உற்சவத்தைப்போல, மும்மூர்த் திகளும் பிறந்த திருவாரூரில் மும்மூர்த்திவிழாவை முன் னின்று நடத்திவந்தார்.

மியூசிக் அக்கடமியின் 'சங்கீத கலாநிதி' விருது இவருக்கு வழங்கப்படவில்லை என்பதைவிட, இவர் அந்த விருதை ஏற்க மறுத்தார் என்பதே உண்மை.

வாத்திய இசைக் கலைஞர்களுக்கு மியூசிக் அக்கடமி, இரவு ஏழு மணி கச்சேரிக்கு வாய்ப்பு அளிப்பதில்லை என்ப தற்கு எதிர்ப்பு தெரிவித்து அவர் அந்த விருதைப் புறக்கணித் தார்.

உலகப் புகழ்பெற்ற மேல்நாட்டு வயலினிசை மேதை யஹூதி மெனுஹின் லால்குடியின் விசிறி. லால்குடியின் இசையில் மயங்கி, தனது வயலினைப் பரிசாக அளித்தார்.


லால்குடியின் காலம், வாத்திய இசைக்கு மதிப்பு மிகுந்து விளங்கிய காலம். வீணை என்றால்; பாலசந்தர், சிட்டிபாபு, ஈமணி சங்கர சாஸ்திரி.

வயலின் என்றால்; லால்குடி ஜெயராமன், ரி. என். கிருஷ்ணன், எம். எஸ். கோபாலகிருஷ்ணன்.

புல்லாங்குழல் என்றால்; மாலி, ரமணி.

இன்று, வாத்திய இசைக்கு கூட்டம் வருவதில்லை.

ஆம்; அது ஒரு பொற்காலம். ■



அரியக்குடி இராமானுஜ ஐயங்கார். பழநி சுப்பிரமணிய பிள்ளை மிருதங்கம்

### கர்நாடக இசைக் கச்சேரிகளில் வயலின்:

# லால்குடிக்கு முன் லால்குடிக்கு பின்

சரித்திர நாவல்களை நாம் வாசிக்கிறபோது அதிலே, கி. மு. (கிறிஸ்துவுக்கு முன்), கி. பி. (கிறிஸ்துவுக்கு பின்) என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதுபோலவே, வயலினிலும் 'லால்குடிக்கு முன், லால்குடிக்கு பின்' என்று நிச்சயமாக குறிப்பிடலாம்.

அந்தக் காலத்தில் வயலின், மிருதங்கத்தோடு ஒரு பெரிய பாட்டுக் கச்சேரி என்றால், லால்குடிக்கு முன்னர் எப்படியெனில், நாலு களைச் சவுக்கமோ, எட்டுக் களைச் சவுக்கமோ பல்லவி பாடி, அநுலோமம், பிரதிலோமம் எல்லாம் பண்ணி, சுரங்கள் பாடி, அப்புறம் மிருதங்க காரரிடம்தான் விடுவார்கள். அவர்கள் மூன்றுகாலம் பண்ணி 'ஷோட்டாக' வாசித்து விட்டதும், பின்னர் பல்லவியை எடுப்பார்கள். இப்படித்தான் சம்பிரதாயம் இருந்தது.

ஆனால், லால்குடி வந்ததற்குப் பின்னர்தான், அவர் வாசிக்கின்ற கணக்கு வழக்குகளையெல்லாம் பார்த்துவிட்டு, பாடகா எல்லோரும் அவரிடம் விட தொடங்கினார்கள்.

தாளத்தில் கணக்கு வழக்கு, பல்லவி பாடுவது என்னும்போது அந்தக் காலத்தில் ஆலத்தூர் சகோதரர்கள், முடிகொண்டான் வெங்கடராம ஐயர் போன்றோர் சிறந்து விளங்கினார்கள். முடிகொண்டான் வெங்கடராம ஐயர் கச்சேரிகளைவிட, 'விளக்க' கச்சேரிகள் செய்வார். மியூசிக் அக்கடமியில் சிம்மநந்தன தாளத்தில் பல்லவி பாடியிருக்கிறார். பழநி சுப்பிரமணிய பிள்ளை மிருதங்கம்; லால்குடி வயலின். அதேமாதிரி, ஆலத்தூர் சகோதரர்கள் கச்சேரிகளில், நாலு களைச் சவுக்கம் பல்லவி, எட்டு களைச் சவுக்கம் பல்லவி, நடை பல்லவி, சங்கீரண நடை; அப்படியெல்லாம் பாடி, மூன்றுகாலம் பண்ணி பின்னர் வயலினுக்கு விடுவார்கள். இவர் வந்ததற்கப்புறம்தான் வயலின் காரரும் இதை வாசிக்கலாம் என்று வந்தது.

ஆனால் ஒன்று, அந்தக் காலத்தில் வயலின்காரரோ அல்லது மிருதங்ககாரரோ 'இன்று என்ன பல்லவி பாடப்போகிறீர்கள்' என்று பாடகரிடம் கேட்கமாட்டார்கள். அவர்களும் இவர்களுக்கு சொல்லமாட்டார்கள். எல்லாமே அந்த இடத்தில்தான். இதோ, எடுத்துக்கொள்ளுங்கள் என்பதுபோல் பாடுவார்கள்; அப்படியே வாங்கி வாசிப்பார். அப்படி கிளம்பியவர்தான் லால்குடி.

அத்தோடு, வெறுமனே கணக்கு வழக்கு மாத்திரமல்ல. ஆலத்தூர் சகோதரர்களும் கணக்கு வழக்கு மாத்திரமன்றி, ராகங்களும் ஓஹோ என்று பாடுவார்கள்.

அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், செம்மங்குடி சீனிவாச ஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், மதுரை மணி ஐயர், ஆலத்தூர் சகோதரர்கள் இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோரு பாணி. இவர் அவர்களுக்கு வாசிக்கும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் என்னென்ன பாணியில் பாடுகிறார்களே அதை பின்பற்றி அப்படியே வாசிப்பார். ஒரு மாணிக்கம்தான் அவர்.


எப்படி, பாலக்காடு மணி ஐயர் கிளம்பி, மிருதங்ககாரருக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்திக் கொடுத்தாரோ, அப்படி வயலினுக்கு ஒரு கௌரவத்தைத் தேடியவர் லால்குடி ஜெயராமன்.

**மிருதங்க வித்வான்**
**காரைக்குடி ஆர். கிருஷ்ணமூர்த்தி**

எனது குரு:

## இனிமை; சுகம்

# இசை உலகின் வள்ளல்



லால்குடி ஸாரின் கொள்ளுத் தாத்தாவும், தியாகராஜ சுவாமிகளின் நேரடி சிஷ்யனுமான லால்குடி ராம ஐயர் எப்படி தியாகராஜரைப் பணிந்தேத்தினாரோ, அதே பாவனையில்தான் அவருடைய இரு பிள்ளைகளும் ஏனைய சிஷ்யர்களும் லால்குடி ஸாரைப் போற்றி வணங்குகிறோம். ஸாருக்கு ஏகலைவன்போல் ஏராளமான சிஷ்யர்கள் உள்ளனர். இவரது வித்துவத்தின் தாக்கம் இல்லாத வயலின் கலைஞர்களே இல்லை என்று சொல்லலாம்.

அவரிடம் பாடங்களைக் கற்றுக்கொள்வது தவிர, அவரின் சம்பாஷணைகளைக் கேட்பது, அவருடன் உரையாடுவது அனைத்துமே விலைமதிப்பற்ற அநுபவங்கள். அவருடன் கூடவே கச்சேரிகளுக்குச் செல்வது வேறுவிதமான அநுபவம்.

கச்சேரிகளுக்கான உருப்படிகளை அவர் தேர்வுசெய்வது, வாத்தியங்களை தயார்படுத்துவது எல்லாமே தனி அலாதி. டிசம்பர் 'மியூசிக் சீசனு'க்காக நவம்பர் மாதத்திலேயே, தம்புராவுக்கும் அனைத்து வயலின்களுக்கும் தந்திகள், 'போ ஹெயர்' எல்லாம் மாற்றப்பட்டு, ரெடியாகிவிடும்.

அவர் இல்லமும் விழாக்கோலம் கொள்ளும்.

வயலினில் உயர்வான சுநாதத்தைக் கொண்டுவருவதற்காக 'சவுண்ட் போஸ்ற்' மற்றும் 'பிரிட்ஜை' சரிசெய்வதுபோன்ற விஷயங்களை அவரிடம்தான் கற்றுக்கொள்ளவேண்டும். வாத்தியத்தை நேராக பார்க்காமலேயே 'சவுண்ட் போஸ்ற்'ரை முன், பின் நகர்த்தினால் எப்படி நாதம் நேர்தியாகும் என்பதை மிகவும் துல்லியமாக சொல்லக்கூடியவர்.

வாய்ப்பாட்டில் கற்றுக்கொண்ட பின்னர்தான் வாத்தியத்தில் வாசிக்க வேண்டும். ஒவ்வோர் ராகத்துக்கும் எந்தெந்த ஸ்வரங்களை அசைக்கவேண்டும்; எந்த ஸ்வரத்தை அசைக்கக்கூடாது என்பதை தெளிவாக எடுத்துச் சொல்வதுடன், அந்தந்த ராகத்தின் சாயலை உடனே கொணரும்படி செய்துவிடுவார். குறிப்பாக, பழைமையான வர்ணங்களில் வரும் சில வேறுபாடான 'அல்லது இசை இலக்கணத்துக்கு முரண்பாடான ஸஞ்சாரங்களில் ஓரிரு ஸ்வரங்களை முன்பின்னாக நகர்த்தி, ராக ஸ்வரூபத்தை நொடிப்பொழுதில் கொணர்வார்.

மும்மூர்த்திகளின் உருப்படிகளாக விருக்கட்டும், பாரதியார் பாடலாகவிருக்கட்டும்; இவர் கைபட்டால் அவ்வுருப்படிகள் மெருகேறி, இனிமையின் உச்சத்தை அடைவதுடன், அதற்கும் மேல் உயர்வாக வேறெந்த பாடாந்தரமும் கிடையாது என, முதல் தரமாக ஆகிவிடும். இதனால், இவரின் படைப்புகள் அனைத்தும் அந்தந்த ராகங்களின் இரத்தினங்களாக ஜொலிக்கின்றன. நாதத்தை விலையாக்கி, எந்தக் கணக்கையும் வைத்ததாக இல்லை. இவரது சங்கீதத்தைக் கேட்கக்கேட்க புதுமை, பொலிவு, புத்துணர்வு மீண்டும் மீண்டும் தோன்றும்.

அவர் விமர்சனம்செய்வது, உவமானங்கள் சொல்வது எல்லாமே சுவாரஷ்யமாகவும் சிந்திக்க வைப்பனவாகவும் இருக்கும். ஓர் உதாரணம்; "ஜுகல்பந்தி என்பது மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலையும் ஆக்ராவிலுள்ள தாஜ்மஹாலையும் பக்கத்தில் வைத்துப் பார்ப்பதுபோல'' என்பார்.

சபரி எப்படி, தான் ருசிபார்த்து, கனிகளை ராமபிரானுக்கு பரிமாறினாரோ அதேபோன்று இந்த ராமன், தானே ஒவ்வொரு சங்கதியையும் ரசித்து ரசித்து, ரசிகர்களுக்கு பரிமாறுவார். அதனால்தான், அவர் சங்கீதம் வானளாவிய புகழை அடைந்துள்ளது.

1991ஆம் ஆண்டு திருவாரூர் மும்மூர்த்திகள் விழாவில் மிக உயர்ந்த ஜேர்மன் வயலின் ஒன்றை எனக்களித்து ஊக்குவித்தார். அவரின் 80ஆவது பிறந்தநாளையொட்டி நானும் எனது சிஷ்யன் விஜயகணேஸும் இணைந்து வாசித்த 'சொல்லவல்லாயோ' என்ற ஒலிப்பேழையை முழுமையாக கேட்டு, அத்தனை பாடல்களையும் அங்கீகரித்து, அதனை வெளியிட கோடிகாட்டி, "எங்கள் பாணியில் வாசித்திருக்கிறீர்கள்'' என்றும் சொன்ன வார்த்தையை மறக்கமுடியாது.

அபார ஞானம், கடின உழைப்பு, ஆராய்ச்சி, புத்திசாலித்தனம் எல்லாம் இணைந்த சேர்க்கையின் பயனாக, அவர் ஓர் அதி உன்னதமான வயலின் பாணியை, விரலசைவு நுணுக்கத்தை கர்நாடக சங்கீத உலகுக்கு விட்டுச் சென்றுள்ளார்.

**ஏ. ஜி. ஏ. ஞானசுந்தரம்**




6, 7, 8 Nageswaran Road, Opp. Panagal Park, T. Nagar, Chennai 600 017.
P: +91 44 24343344 www.nallijewellers.com



> ''சரி! சரி! நம்ப சுப்பராயப் பிள்ளை மகளா? என்ன நகை போடுவா?''

# ஒப்பந்தம்

பார்வதிநாதனுக்கு பி.ஏ.பாசாகிவிட்டது. அதுமட்டுமல்ல, ஸர்வீஸ் கமிஷன் பரீட்சையிலும் முதல் தொகுதியில் வந்துவிட்டான். சீக்கிரத்தில் வேலையாகிவிடும். கலியாணம் ஒன்றுதான் பாக்கி. அதையும் செய்து முடித்துவிட்டால் பையனைப்பற்றிய கவலை ஓய்ந்துவிட்டது என்று நினைத்தார் சங்கரலிங்கம் பிள்ளை.

ஒரு நாள் காலை. பிள்ளையவர்கள், தாம்பிரவர்ணியின் ஸ்நான இன்பம், நீண்ட பூஜை முதலியவற்றுக்கு முற்றுப்புள்ளியான காலை போஜனத்தை முடித்துக்கொண்டதும், சுக ஜீவனத்தின் குதூகலத்தை அனுபவித்தவராய், ''ஏளா, அங்கே என்ன செய்யுதே'' என்று தமது பத்தினியைக் கூப்பிட்டார்.

''என்ன, நீங்களா கூப்பிட்டிய; இன்ன வாரேன்.''

''நம்ம குட்டிக்கு'' - பார்வதிநாதனின் செல்லப் பெயர் - ''பொண்ணு பார்க்க வேண்டாமா?''

''எனக்கென்னா தெரியும்? நீங்க சொல்லுதது சதி. நம்ப சிங்கிகுளத்துப் பொண்ணெப் பாத்தா என்ன? பொண்ணு நல்ல செவத்த பொண்ணு; கண்ணும் முளியும் அப்படியே பாத்துக்கிட்டே இருக்கலாம். ஆனா, புள்ளையவாளுக்குப் பிடிக்குமோ என்னமோ? இந்தக் காலத்துப் புள்ளையளை என்ன சொல்ல?''

''அதாரு, சிங்கிகுளத்திலே?''

''என்ன உங்களுக்குத் தெரியாதாக்கும்? பேட்டையக்கா இருக்காஹள்ளே, பார்வதியக்கா, அவளுக்கு ஒண்ணுவிட்ட தம்பி மக.''

'சரி! சரி! நம்ப சுப்பராயப் பிள்ளை மகளா? என்ன நகை போடுவா?''

''அது எனக்கென்ன தெரியும்? கோமதியக்காக்கிட்ட விசாரிச்சா தெரியும். நா அவளைக் கூப்பிடுதேன்'' என்று வெளியே சென்று ஒரு விதவையைக் கூப்பிட்டு வந்தாள்.

''அம்மா, வா. இரி. நம்ம குட்டிக்கு இவ என்னமோ சிங்கிகொளத்துப் பொண்ணு ஒண்ணு இருக்காமே. அதைப் பாக்கலாமென்னு சொல்லுதா. நீ என்னமோ, பாத்திருக்கியாமே. அதெப்படி, நகை என்னம்மா போடுவா?'' என்று கேட்டார் சங்கரலிங்கம் பிள்ளை.

''அதா, நல்ல எடமாச்சே. பொண்ணு தங்கமான கொணம். அவுஹளும் அப்படித்தான். என்னமோ ரெண்டு ஆயிரத்துக்கு செய்வாஹ இன்னு சொல்லி இருந்தாஹ.''

''இப்புட்டுத்தானே! சதி, சதி. பேச்சே விட்டுத் தள்ளு. நம்ம பேட்டைப்பிள்ளை ஐயாயிரம் நகை மருக,

கலியாணச் செலவு ஒரு ரெண்டாயிரம் யென்று சொன்னாரே!''

"ஆமா, பொண்ணு கறுப்பில் லையா? எதுக்கும் கேட்டுப் பாருங்க ளேன்.''

"சதி, நீ என்ன சொல்லுதே?''

"பாத்தா என்ன? நானும் அக்காளும் போயிட்டுத்தான் வாரமே!'' என்றாள்.

"சதி, நாளைக்கு மேக்கெ சூலம். நாளைக் கழிச்சி உதயத்திலே வண்டியப் போட்டுக்கிட்டுப் போய் பாத்துட்டு வாருங்க. பொறவு நாவன்னாவை விட்டு நான் விசாரிக்கேன்.''

"அய்யா, தபால்!'' என்று தபால்கா ரன் உள்ளே நுழைந்து கவர்மெண்டு முத்திரையிட்ட நீண்ட 'லகோடா' வைக் கொடுத்தான்.

"நம்ம குட்டிக்குப் போல இருக்கு. ஏலே அய்யா!'' என்று கூப்பிட்டார்.

"என்னப்பா?'' என்று கீழே வந்தான் பார்வதிநாதன்.

கடிதத்தைப் பிரித்துப் பார்க்க, சென்னையில் குமாஸ்தா வேலையாகி யிருப்பதாகவும், 25-ந் தேதி வந்து வேலை ஒப்புக்கொள்ளும்படியும் எழு தியிருந்தது.

வீட்டில் ஒரே குதூஹலம். தபால்கா ரன் 'பக்ஷிஸ்' தட்டாமல் போக வில்லை.

"ஏலே அய்யா! உனக்கு ஒங்கம்மை சிங்கிகொளத்துப் பொண்ணைப் பாத் திருக்கிறா, அப்பா. ஒனக்குப் புடிக் குமா?'' என்று கேட்டார்.

பார்வதிநாதனுக்கு இந்த விஷயம் திடுக்கிடச் செய்தது. இந்தமாதிரி தகப் பனார் பேசியது இதுதான் முதல் தரம். முகம் வெட்கத்தால் சிவந்தது. ஒன்றும் பேசாமல் மெத்தைக்கு ஏறினவன், "நாளைக்குப் புறப்படவேண்டும்'' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட் டான்.

2

பெண்ணை எல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்தாகிவிட்டது. சங்கர லிங்கம் பிள்ளையின் மனைவிக்கு சிங் கிகுளத்துப் பெண் பேரில் நோக்கம்.

சங்கரலிங்கம் பிள்ளைக்கு இப் பொழுது மகனுக்கு வேலையாகிவிட்ட தால் ரேட்டை உயர்த்த வேண்டும் என்ற நோக்கம். நகைவழியாகக் குறைந் தது மூவாயிரமாவது கறந்துவிடவேண் டும் என்ற தீர்மானம்.

நாவன்னா - நாராயண பிள்ளை அவர் பெயர் - அவரை விட்டுப் பெண் வீட்டுக்காரரைத் தூண்டிவிடும்படி ஏற் பாடு செய்தார்.

நாராயண பிள்ளை ஒரு தடவை சிங்கிகுளத்துப் பக்கம் சென்றார். "நம்ம பையன் ஒருவன் இருக்கிறான். கொடுக் கலாம். நல்ல இடம்!'' என்றார். விஸ்த ரிப்பானேன்? பெண்ணின் தகப்பனார் மாப்பிள்ளை வீட்டாரைக் கண்டுபே சப் புறப்பட்டார். நண்பர் நாவன்னா வீட்டில் ஜாகை.

மறுநாள்.

இருவரும் சங்கரலிங்கம் பிள்ளை வீட்டிற்கு வருகிறார்கள்.

"அண்ணாச்சி, இவுஹதான் நம்ம சிங்கிகுளத்துப் பிள்ளையவாள். இந் தப் பக்கத்திலே வந்திருந்தாஹ. பாத்துக் கிட்டுப் போகட்டுமே என்று கூட்டி வந் தேன்'' என்றார் நாவன்னா.

"அப்பிடியா! வாருங்க! வாருங்க! ஏளா! வெத்திலை செல்லத்தை எடு. அங்கே தூத்துட்டு சமுக்காளத்தை விரி! காப்பி சாப்பிடுங்களேன். அம் மாளு, ரெண்டு எலை போடு!'' என்று துரிதப்படுத்தினார்.

அவருடைய தர்மபத்தினியும், "வாருங்க! சேவிக்கேன்!'' என்று வர வேற்றுவிட்டு, அவசர அவசரமாகப் பெருக்கிவிட்டு, ஜமுக்காளத்தை எடுத்து விரித்து, வெற்றிலைச் செல் லத்தை எடுத்து வைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

"நாங்கள் எல்லாம் காப்பி ஆச்சு! நீங்கள் ஆச்சா? இல்லாவிட்டா முடிச் சுக்கொண்டு வந்துவிடுங்கள்'' என்றார் நாராயண பிள்ளை.

"நான் எல்லாம் ஆச்சு! வெத்திலைப் போடுங்க'' என்றார் சங்கரலிங்கம் பிள்ளை.

பேச்சு மெதுவாகப் பெண் விஷயத் தில் வந்து விழுந்தது.

"ஆமாம்! பையனுக்கு வேலையும் ஆச்சே, முடிச்சுவிடலாம் என்று எண் ணுகிறேன்'' என்றார்.

"ஆமாம். அது செய்யவேண்டியது தான்'' என்றார் சிங்கிகுளத்துப் பிள்ளை.

"உங்களுக்கு என்ன உத்தேசம்?'' என்று அவரைக் கேட்டார் நாராயண பிள்ளை.

"உங்களுக்குத் தெரியாததா? நகை ஒரு ரெண்டாயிரம், மத்தச் செலவு ஒரு ஆயிரம்!'' என்றார்.

"என்ன, நம்ம பேட்டையப் பிள்ளை சொன்னதைக் கேட்டி யள்ள?'' என்றார் சங்கரலிங்கம் பிள்ளை.

"ஆமா, ஆமா. அதிருக்கட்டும். இந் தக் காலத்திலே ஆயிரத்தைச் சொன் னாப் போதுமா? சொன்னதைச் சொன் னபடி செய்யணும். அது நம்ம பிள்ளை யவாள்தான். நான் ஒன்று பொதுவாச் சொல்லுகிறேன். நகை மூவாயிரம். மத் தது ரெண்டாயிரம்!'' என்றார்.

எல்லாரும் சற்று மௌனம்.

"அண்ணாச்சி! நீங்க ஒரேயடியா மொதொண்டாதிக. பிள்ளைவாள்! நீங்க காலைத் தேச்சா பிரயோசன மில்லை. நல்ல இடம். பையனுக்கு நல்ல அதிர்ஷ்டம். கவர்மெண்டு வேலை. இனிசூபெட்டரு. தாசில்தாரா வர லாம். உங்க பெண்ணுக்கு ராஜயோ கம்!'' என்று மத்தியஸ்தம் பேசினார் நாவன்னா.

"சதி! பொறவு நீங்க சொல்லுறப்பா என்னா?'' என்றார் சிங்கிகுளத்துப் பிள்ளை.

"வேறே என்ன அய்யா? இப்பவே வெத்திலை பாக்கு கை மாறிடுத்து. வர வியாழக்கிழமை நல்ல தினம். அன் னைக்கி திருமங்கிலியத்திற்கு பொன்னு ருக்கி விடுகிறது. சரிதானே பிள்ளை வாள்?'' என்று ஒரு வெள்ளித் தாம்பா ளத்தைச் சங்கரலிங்கம் பிள்ளையின் தர்மபத்தினியிடம் வாங்கி அந்தச் சிறு சடங்கை நடித்து முடித்தார்கள்.

3

சென்னையில் அன்று சாயங்காலம்.

பார்வதிநாதன் வேலை ஒப்புக் கொண்டாகிவிட்டது. தகப்பனார் கொடுத்த பணம் கொஞ்சம் கையில் ஓட்டம். சினிமாவிற்குச் சென்றான்.

இவனுக்குப் பக்கத்தில் ஒரு ஆங் கிலோ இந்திய மாது - இள நங்கை உட் கார்ந்திருந்தாள்.

தகப்பனார் அன்று பெண் விஷயத் தைக் கேட்டதிலிருந்து அவனுக்கு ஒரு புதிய உணர்ச்சி, இயற்கையின் தேவை, அடிக்கடி மனத்தில் சுற்றிக்கொண்டே இருந்தது. பார்வதிநாதன் நல்ல பையன் தான். இதுவரை அந்த நினைப்பிற்கு அவகாசமில்லை.

ஆனால் அந்தத் தினத்திலிருந்து அவனது உடல் கட்டுக்கடங்கவில்லை.

அன்று இருவர் சினிமா பார்க்க வில்லை.

அந்த நங்கை ஐந்து ரூபாய்க்கு இரண்டு மணி நேரம் அவன் மனைவி யாக இருக்கச் சம்மதித்தாள்.

இருவரும் கடற்கரைக்குச் செல்லு கிறார்கள்.

அந்தச் சிங்கிகுளத்துப் பெண் மூவா யிரம் ரூபாயைப் பணயமாக வைத்து, அவனுடன் வாழ்க்கையைப் பிணைத் துக்கொள்ளச் சம்மதிக்கும்பொழுது, ஐந்து ரூபாய்க்கு இரண்டு மணி நேரம் சரிதானே?

('மணிக்கொடி' - 1934)




# ஐ. பி. எல். கிரிக்கெட்:

# களங்கம்

**கிரிக்கெட் வாரியம், பணம் சம்பாதிக்கும் நிறுவனமாக மாறியிருப்பதுதான் அனைத்து கோளாறுகளுக்கும் காரணம். இதனைச் சரிசெய்யாவிட்டால், எல்லாமே கண்துடைப்பாகவே இருக்கும்**


அரவிந்தன்

'இந்தியன் பிரிமியர் லீக்' (ஐ.பி.எல்.) போட்டித் தொடரில் இந்த ஆண்டு பூர்வாங்கச் சுற்றில் சிறப்பாக ஆடி, மிகவும் எளிதாகவும் இயல்பாகவும் இறுதிப் போட்டியை அடைந்து, அங்கே தன்னோடு மோதவரும் அணிக்காக காத்திருந்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அது, களத்தில் அல்ல, களத்துக்கு வெளியில். அந்த அணியின் நிர்வாகியும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் என். ஸ்ரீநிவாசனின் மருமகனுமான குருநாத் மெய்யப்பன் கிரிக்கெட் சூதாட்டம், 'மட்ச் ஃபிக்ஸிங்' மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளுக்காக கைதுசெய்யப்பட்டார். மாலையில் 'மும்பை இந்தியன்ஸ்' அணி சென்னையைத் தோற்கடிப்பதற்கு முன்பே, மும்பை பொலீஸ் அணி சென்னை அணியின் கௌரவத்திற்கு வேட்டு வைத்தது. சென்னை அணி ஆடிய போட்டிகள் அனைத்தும் விசாரிக்கப்படும் என்று கசிந்த செய்திகள், உண்மையான கிரிக்கெட் ஆட்டக்காரர் ஒவ்வொருவரையும் தலைகுனியவே வைத்திருக்கும்.

'மட்ச் ஃபிக்ஸிங்', 'ஸ்பாட் ஃபிக்ஸிங்', சூதாட்டம், லஞ்சம் என்று செய்தி ஊடகங்களில் பெரும் புயலைக் கிளப்பிவரும் இந்த மோசடி விவகாரம், ஐ.பி.எல். மீது மட்டுமன்றி ஒட்டு மொத்த கிரிக்கெட்டின்மீதும் தன் கரு நிழலைப் படரவிட்டிருக்கிறது. ஐ.பி.எல். ஆட்டங்கள் பற்றி இப்போதெல்லாம் யாரும் பேசுவதில்லை. 'றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்' அணியைச் சேர்ந்த கிறிஸ் கெயில் 'பூனே வாரியர்ஸு'க்கு எதிரான போட்டியில் முப்பது பந்துகளில் நூறு ஓட்டங்களை எடுத்தார். அந்த இன்னிங்ஸில் ஆட்ட



என். ஸ்ரீநிவாசன்



குருநாத் மெய்யப்பன்

**கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக இருப்பவர், எப்படி ஐ.பி.எல். அணியின் உரிமையாளராக இருக்கமுடியும்?**

மிழக்காமல் 175 ஓட்டங்களை அவர் எடுத்தார். 17 'சிக்சர்'களையும் விளாசினார். இவை அனைத்துமே புதிய சாதனைகள். 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளின் எல்லைகளையும் வரையறைகளையும் அதிரடியாக மாற்றி எழுதிய அற்புதங்கள். அதற்குச் சில நாள்கள் கழித்து, டேவிட் மில்லர் 38 பந்துகளில் 101 ஓட்டங்கள் எடுத்து, தன் அணியை ('கிங்ஸ் லெவெண் பஞ்சாப்') வெற்றி பெறவைத்தார். தோல்வியின் வாயிலிலிருந்து நம்பமுடியாத விதத்தில் அணியை மீட்டெடுத்தார். கிரிஸ் கெய்ல், டேவிட் மில்லர், விராட் கோஹ்லி, கீரன் பொல்லார்ட், மகேந்திர சிங் தோனி, மைக்கேல் ஹஸி, சுனில் நரேன், மிட்சல் ஜோன்சன், டேல் ஸ்டெயின், சஞ்சு சாம்சன், ரோஹித் சர்மா, தினேஷ் கார்த்திக்... இவர்கள் அனைவருமே ஏதோ ஒரு தருணத்தில் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, ரசிகர்களின் மனங்களைக் கவர்ந்தார்கள். அணி சார்ந்த விசுவாசங்களை மீறி இவர்கள் கொண்டாடப்பட்டார்கள். ஆனால், ஐ.பி.எல். என்று சொன்னதும், இவர்களில் எவரின் பெயரும் இனி நினைவுக்கு வரமாட்டாது. ஸ்ரீசாந், அஜித் சாண்டிலா, அங்கீத் சவான் ஆகிய பெயர்களே நினைவில் வரும். இவர்களுடன், குருநாத் மெய்யப்பன், விண்டூ சிங் ஆகிய பெயர்களும் நினைவில் வரும். இவர்கள் யாருமே ஆடுகளத்தில் ஏந்தச் சாதனையும் நிகழ்த்தவில்லை. இவர்கள் செய்த 'சாதனை' எல்லாம் ஆடுகளத்துக்கு வெளியில். அது, சூதாட்ட களம்.

கிரிக்கெட் ஆட்டங்களை வைத்து, பணம் செலுத்தி சூதாடும் பழக்கம் புதிதல்ல. சட்ட விரோதமான இந்தச் செயல்பாடு, திரைமறைவில் நடந்து கொண்டிருப்பது எல்லோருக்குமே தெரிந்ததுதான். இதில், கோடிக்கணக்கான பணம் புழங்குவதும் ரகசியமல்ல. சூதாட்டத்தில் வென்று, பெரும் பணத்தைச் சுருட்ட, சூதாட்டக்காரர்கள் ஆட்டக்காரர்கள் சிலருக்கு லஞ்சம் கொடுத்து தங்களுக்குச் சாதகமாக ஆடச் சொல்வதாகவும், முக்கியமான தகவல்களைக் கேட்டுப் பெறுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. ஆனால், ஆதாரபூர்வமாக யாரும் இதுவரை சிக்கவில்லை. அந்தக் குறையைப் போக்கிவிட்டது, இந்த ஆண்டின் ஐ.பி.எல். போட்டித் தொடர்.

'ராஜஸ்தான் றோயல்ஸ்' அணியைச் சேர்ந்த ஸ்ரீசாந், சாண்டிலா, சவான் ஆகியோர் லஞ்சம் பெற்றுக் கொண்டு, சூதாடக்காரர்களுக்கு சாதக

மாக ஆடுகளத்தில் செயல்பட்டிருப்ப தாக குற்றம்சாட்டப்பட்டு, கைதுசெய் யப்பட்டிருக்கிறார்கள். சூதாட்டக்கா ரர்களுடன் இருந்த தொடர்புக்காக விண்டு சிங் என்னும் நடிகரும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நிர் வாகி குருநாத் மெய்யப்பனும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விஷயம், தோண்டத் தோண்ட பெரிதாகிக் கொண்டே வருகிறது. பெரிய தலைக ளின் பெயர்கள் அடிபடுகின்றன. மொத்த ஐ.பி.எல்லுமே பொய்தானா என்ற ஐயங்கள் எழுப்பப்படுகின்றன. இனி, ஐ.பி.எல். நடக்குமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

பணம் அதிகமாகப் புழங்கும் இடத்தில் முறைகேடுகளும் அதிகமாக நடக்கும் என்பது பொதுவான விதி. அப்படியிருக்க, ஊழல்கள் மலிந்த இந் தியாவில் இதைக் கேட்கவா வேண்டும்? ஏற்கனவே பணத்தில் புரளும் கிரிக் கெட் நிர்வாகம், மேலும் அதிகம் பணம் புழங்கும் ஐ.பி.எல்.ஐ நடத்த ஆரம்பித்ததுமே இதுபற்றிய யோச னைகள் எழுந்தன. ஆட்டத்தின்மீதான தீவிரமான காதலும், உலகளாவிய திற மைசாலிகளின் சங்கமமும் சேர்ந்து இவற்றை மறக்கடித்து, கேளிக்கையை வழங்கின. ஆனால், இப்போது சிக்கிக் கொண்ட ஆடக்காரர்களும் மற்றைய வர்களும் இந்தக் கேளிக்கையின்மீது கருநிழலைப் படர விட்டிருக்கிறார் கள். இந்தக் கருநிழல் ஒட்டுமொத்த ஐ.பி.எல். மீது மட்டுமன்றி, கிரிக்கெட் ஆட்டத் தின்மீதே படரும் அளவுக்கு வளர்ந்து வருகிறது. இனி எந்த ரசிகரும் எந்தப் போட்டியையும் துளியேனும் சந்தேகம் இல்லாமல் பார்க்கமுடியுமா என்பது ஐயம்தான். இந்தச் சந்தேக மேகம்தான் கிரிக்கெட் ஆட்டத்தின் மீது படிந்த தீராத களங்கம் என்று சொல்லலாம்.

வாரிய மட்டத்திலான விசாரணை, காவல்துறை விசாரணை என்று பலவி தமான விசாரணைகள் நடைபெறுகின் றன. ஸ்ரீநிவாசன் பதவிவிலகவேண்டும் என்ற குரல்கள் எழுகின்றன. செய்தி ஊடகங்கள் நாளுக்கு நான்கு அம்பலங் களை வெளியிடுகின்றன. எது உண்மை என்பதும், ஆடுகளத்தின் இயக்கங்கள் இயல்பானவையா அல்லது பின்னணி யிலிருந்து இயக்கப்படும் பொம்மலாட் டமா என்பதும் தெரியவரலாம். அல் லது, ஸ்ரீசாந்போன்ற யாராவது ஒருவர் தனித்த வில்லனாக சித்தரிக்கப்பட்டு, மற்றையவர்கள் புடம்போட்ட தங்கங் களாக ஜொலிக்கவும் வாய்ப்பிருக்கி றது. பணம் இருக்கும் இடத்தில் மோச டிகள் நடப்பதைப்போலவே, மோசடி கள் மறைக்கப்படுவதும் இயல்புதான்.

கிரிக்கெட்டை ஊக்குவிப்பதற்காக, கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் துக்கு வரிச் சலுகைகள் உள்பட, பல் வேறு சலுகைகளை இந்திய அரசு அளித்தது. அதற்கு தன்னாட்சி அதி காரமும் அளித்தது. நாளடைவில், கிரிக்கெட் பெருவாரியான இந்திய மக் களின் மனம் கவர்ந்த விளையாட்டாக வும், பணம் காய்க்கும் மரமாகவும் மாறிய பின்னர், வாரியம் செல்வச் செழிப்பில் திளைத்தது. ஆனால், அப் போதும் வாரியத்துக்கு வழங்கப்பட்டி ருந்த சலுகைகளும் அபரிமிதமான வருமானமும் நீடித்தன. வருமானத் துக்கு ஏற்ற வரிகள், கண்காணிப்புகள், கட்டுப்பாடுகள் ஆகியவை விதிக்கப்ப டவில்லை. கட்டற்ற இந்தச் சுதந்திரம், அதை மிகவும் வலுவுள்ள அதிகார அமைப்பாக மாற்றிவிட்டது. உலக அளவில் வலிமை பொருந்திய அமைப் பாக இருக்கும் இந்திய கிரிக்கெட் வாரி யம், தட்டிக் கேட்கவோ கண்டித்துத் திருத்தவோ முடியாத இடத்துக்கு சென்றுவிட்டது. அசுரத்தனமான அதிகாரம்தான் அதன் பல்வேறு கோளாறுகளுக்கும் காரணம்.

வாரியத்தின் தலைவராக இருப்ப வர், எப்படி ஐ.பி.எல். அணியின் உரி மையாளராக இருக்கலாம்? அவரது மாப்பிள்ளை எப்படி சூதாட்டக்காரர் களின் நண்பராக இருக்கலாம்? சர்வ தேச கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரி யம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களை அணுகுவதற்கு பல கறாரான விதிகளை ஏற்படுத்தியுள்ளது. ஆட்டம் நடக்கும் போது ஆட்டக்காரர்களை யார்யார் தொடர்புகொள்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க கடுமையான ஏற்பாடு கள் உள்ளன. செய்தியாளர்கள், உறவி னர்கள் உள்பட, பலருக்கும் பல கட்டுப் பாடுகள் உள்ளன. 'டிரெஸ்ஸிங் ரூம்' என்று சொல்லப்படும் வீரர்களின் பிரத்தியேக அறையில் அணியினர், அணியின் ஊழியர்கள் தவிர, யாரும் நுழையமுடியாது. ஆனால், சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிகளின்படியே போட்டிகளை நடத் துவதாகச் சொல்லிக்கொள்ளும் ஐ.பி.எல்.இல் இந்த விதிகள் பலவும் நெகிழ்ந்துவிடுகின்றன. அணிகளின் உரிமையாளர்கள், அவர்களுடைய நிறுவனங்களின் முக்கிய புள்ளிகள், அவர்களது குடும்பத்தினர், பாதுகாப்பு அதிகாரிகள், செய்தி ஊடக நண்பர்கள் எனப் பலரும் பல இடங்களிலும் நட மாடிவருவதைப் பார்க்கமுடிகிறது. இவை அனைத்துமே முறைகேடுக ளுக்கு வித்திடக்கூடியவை. ஆனால், கிரிக்கெட் வாரியம் இவற்றைக் கண்டு கொள்வதில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லா மோசடிகளுக்கும் அடிப்படை யாக அமையும் சூதாட்டத்தை ஒழிப் பது பற்றி வாரியம் பேசுவதில்லை. இந் திய அரசும் பேசுவதில்லை. வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கும் பல்வேறு கட்சிகளின் பிரமுகர்களும் பேசுவ தில்லை. கிரிக்கெட் வீரர்கள் இதுபற்றி என்ன நினைக்கிறார்கள் என்றோ, அவர்களுக்கும் சூதாட்டக்காரர்களுக் கும் உள்ள தொடர்பைப்பற்றியோ அறிய எந்த வீரரிடமுமே பேசமுடி யாத நிலை உள்ளது. காரணம், வாரி யம் அவர்களுக்கு விதித்திருக்குக்கும் கட்டுப்பாடு. இந்நிலையில், உண்மை என்பது கைக்குச் சிக்காத புகையாக நழுவிக்கொண்டிருக்கிறது. தீர்வு என் பது கண்ணுக்கும் தெரியாத பிசாசாக அலைக்கழிக்கிறது.

இந்திய கிரிக்கெட் அணியை வைத் துக் கோடிகோடியாக சம்பாதிக்கும் வாரியம், இந்திய கிரிக்கெட்டின் மேம் பாட்டுக்கோ, புதிய திறமைசாலிகளை உருவாக்குவதற்கோ எதுவும் செய்வ தில்லை. இந்திய அணியின் வெற்றியின் பெருமையை பங்குபோட்டுக்கொள் ளும் வாரியம், தோல்விகளின் கறை படாமல் ஒதுங்கிக்கொள்கிறது. தொழில்முறை அணுகுமுறை, தொலைநோக்கு, வெளிப்படையான செயல்பாடு ஆகியவற்றுடன் கிரிக் கெட் திறனைப் பெருக்கவேண்டிய வாரியம், தன் அடிப்படைக் கடமை களை விட்டுவிட்டு, பணம் சம்பாதிக் கும் நிறுவனமாக மாறியிருக்கிறது. இது தான் எல்லாக் கோளாறுகளுக்கும் கார ணம். இதைச் சரிப்படுத்தாமல், பிரச் னைகளைச் சரிசெய்ய முயல்வது முற்றி லும் கண்துடைப்பாகவே இருக்கும்.

அரசியல்வாதிகள் பல்வேறு கார ணங்களால் வாய்மூடி இருக்கிறார்கள். இவர்களில் பலர் வாரியத்தில் பங்கு பெறுபவர்கள்; அதனால் பலன் பெறு பவர்கள். எனவே, வாரியத்துக்கு கடிவா ளம்போட இவர்கள் தயங்குவதில் வியப்பில்லை. இநிலையில், மக்களின் தொடர் நிர்ப்பந்தமும் நீதிமன்ற நடவ டிக்கைகளும் சேர்ந்துதான் கிரிக் கெட்டை இந்த நெருக்கடியிலிருந்து மீட்கமுடியும். ■




Accomodates up to 650 with complete onsite parking facility for more than 150 cars

G&G Event Specialists Ltd. Snakey Lane, Feltham, Hounslow, TW13 7NA. 07788560001. www.nakshatrahall.com



ரி. எம். சௌந்தரராஜன் (1922-1913)

# திரைக் குரலின் யுக நாயகன்

## பாடும் பரவசத்தை கேட்டிடத் தோன்றுது...

எஸ். சம்பத் குமார்

சென்னை வானொலியில், 'விவித் பாரதி' எனப்படும் வர்த்தக ஒலிபரப்பு பிரிவில் அறிவிப்பாளராக பணிபுரிந்துவந்த காலம். தொலைக்காட்சி இந்தியாவில் அறிமுகமாகாத, வானொலி யுகம் அது.

திரை இசைப் பாடல்களை ஒலிபரப்பியபின் ஏராளமான கடிதங்கள் வருவது வழக்கம். ('ரேடியோ சிலோன்' நிகழ்ச்சிகளிலிருந்து, மக்களைத் தன் பக்கம் இழுப்பதற்காக வென்றே அறிமுகப்படுத்தப்பட்டதுதான் விவித் பாரதியின் வர்த்தக ஒலிபரப்பு.)

"ஏன் சிவாஜியின் பாடல்களைவிட அதிகமாக எம். ஜி. ஆர். பாடல்களை ஒலிபரப்பினீர்கள்'' என்று கண்டனக் கணைகளாகப் பல கடிதங்கள்.

"ஏன் சிவாஜி கணேசனின் பாடல்களை அதிகமாகப் போட்டீர்கள்'' என்று சீறும் கடிதங்கள் இன்னொரு பக்கம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த இருவருக்குமே குரல் கொடுத்துப் பாடியவர் ஒருவரே என்பதுதான். அந்த ஒப்பற்ற தனித்துவம்மிக்க குரலுக்கு சொந்தக்காரர்தான் ரி. எம். சௌந்தரராஜன்.

எம். கே. தியாகராஜ பாகவதருக்குப் பின்னர் மக்களைக் கவர்ந்திருந்த கம்பீரக் குரல் அவருடையது. உண்மையில், தியாகராஜ பாகவதரின் குரலில் இல்லாத பன்முகத் தன்மையும் உணர்வுகளும் ரி. எம். சௌந்தரராஜனிடம் இருந்தன. 1946இல் தொடங்கியது சௌந்தரராஜனின் இசைப் பயணம்.

துவக்கத்தில் தியாகராஜ பாகவதரைப்போலவே பாடி, பல மேடைக் கச்சேரிகளை நிகழ்த்திவந்தார். கர்நாடக இசையை முறையாகப் பயின்றவர். 1946ஆம் ஆண்டு 'ஸ்ரீ கிருஷ்ண விஜயம்' என்ற படத்தில், "ராதா என்னைவிட்டுப் போகாதேடி...'' என்ற பாடலின்மூலம் திரையுலகில் அறிமுகமானார். மாடர்ன் தியேட்டர்ஸ் எடுத்த 'மந்திரி குமாரி' படத்தில் பாடுவதற்கு, அன்று புகழ்பெற்று விளங்கிய ஜி. ராமநாதன் வாய்ப்பளித்தார். அந்தப் படத்தில் எம். ஜி. இராமச்சந்திரன் நடித்திருந்தார்; ஆனால், சௌந்தரராஜன் பின்னணி பாடியது எம். ஜி. ஆருக்கு அல்ல. ஏதோ, பெயர் தெரியாத விவசாயி பாடும் தத்துவ பாட்டாக அமைந்திருந்தது அந்தப் பாட்டு. "அன்னமிட்ட வீட்டிலே கன்னக்கோல் சாற்றவே எண்ணம் கொண்ட பாவிகள் மண்ணாய்ப்போக நேருமே...'' என்ற அந்தப் பாடல் மக்களைக் கவர்ந்ததென்றாலும், அந்தப் படத்தில் புகழ்பெற்ற பாடல்களைப் பாடியவர் திருச்சி லோகநாதன்.

"ஜி. ராமநாதன்தான், என்னை இசைக் கலைஞனாக செதுக்கிய சிற்பி'' என்று, கடைசிவரை சௌந்தரராஜன் அவரை நன்றியுடன் நினைவில் நிறுத்தியிருந்தார். 'தூக்கு தூக்கி' என்ற படத்தில் ஜி. ராமநாதன் அவருக்கு சிவாஜி கணேசனுக்காக பாடுவதற்கு வாய்ப்பளித்தார். அதுவரை சிவாஜிக்கு ஏற்ற குரலாகப் பார்க்கப்பட்டவர் சிதம்பரம் ஜெயராமன்.

ஜி. ராமநாதன்தான் திரையில் மெல்லிசையை அறிமுகப்படுத்தியவர் எனலாம். என்றாலும், நாடக மேடையின்



## சொல்லப்போனால், அவர் பாடியதற்கு ஏற்ப சிவாஜி கணேசன் நடித்தாகவேண்டும்

பாதிப்பு ஆரம்பகால திரைப்படங்களில் அதிகமாக இருந்தது. அதாவது, பாடல்கள் உச்சஸ்தாயியிலேயே பாடப்பட வேண்டும். அப்படிப்பட்ட உச்சஸ்தாயியில் பாடும் திறன் சௌந்தரராஜனுக்கு இருந்தது. "குரல் அவர் எதிர்பார்த்த உயரத்தை எட்டவில்லை என்றால், 'சௌந்தரராஜா, நீ போய் நாளை எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, பின்னர் பாட வா' என்பார்'' என்று சௌந்தரராஜன் கூறுவார்.

தூக்கு தூக்கியில் "பெண்களை நம்பாதே...'', "ஏறாத மலைதன்னில் ஏறி...'', "சுந்தரி சௌந்தரி நிரந்தரியே...'' போன்ற மறக்கமுடியாத பாடல்கள் பெரும் புகழ்பெற்றன. சிவாஜி கணேசனுக்குப் பிடித்துப்போய்விட்டது; சிவாஜி, தன் சொந்தக் குரலில் பாடுவதுபோலவே தோன்றியது.

'மலைக் கள்ளன்' படத்தில் எஸ். எம். சுப்பையா நாயுடுவின் இசையில் எம். ஜி. ஆருக்காக பாடினார். அன்றைய அரசியல், சமூக சூழலில் அந்தப் பாட்டு பிரபலமானதற்கு அந்தப் பாடலைப் பாடிய சௌந்தரராஜனும் காரணம். "எத்தனை காலம்தான் ஏமாற்றுவாய் இந்த நாட்டிலே...'' என்ற பாடல்மூலம் அவர் எம். ஜி. இராமச்சந்திரனுக்காக பாடத் தொடங்கினார்.

திரைத் துறையை சிவாஜி கணேசனும் எம். ஜி. ஆரும் ஆக்கிரமித்திருந்த காலகட்டம்; எனவே, இருவருக்கும் பொருந்தும்படி பாடும் திறமைமிக்க சௌந்தரராஜனுக்கு வாய்ப்புகள் குவிந்தன. வானொலி நிலையங்கள் அவருடைய பாட்டுக்களை ஒலிபரப்பி, அவர் புகழ் பரப்பின. அடிக்கடி இலங்கைக்கு சென்றுவந்த அவரைப் பேட்டிகண்டு, அவருடைய பாட்டுக்களைப் பிரபலப்படுத்தியதில் இலங்கை வானொலியின் மயில்வாகனனுக்கும் பெரும்பங்கு உண்டு.

அப்படி என்னதான் அவரிடம் இருந்தது?

ஆண்மைமிக்க கம்பீரமான குரல்; மென்மை காட்ட வேண்டிய இடங்களில் நாசிமூலம் காட்டும் இனிமை... தியாகராஜ பாகவதரின் குரலில் இருந்த பெண்மையின் சாயை இவரிடம் இல்லை. ஆனால், பாகவதரைப்போலவே ஓங்கிக் குரலெடுத்துப் பாடும் திறமை இருந்தது. 'நான் பெற்ற செல்வம்', 'சதாரம்', 'வணங்காமுடி' ஆகிய படங்களில் அவர் தொட்ட உச்சஸ்தாயியை வேறு எவரும் எண்ணிக்கூடப் பார்க்கமுடியாது. சதாரம் படத்தில் "நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே...'' என்று உச்சஸ்தாயியில் எடுப்பார். அடுத்த வரி, "அணைந்த தீபமாய் ஆகிப்போனதே...'' அதிலும் அதிக உச்சம்.

"அடைந்த செல்வம் கொள்ளை போனதே...'' என்ற வரிகள் மிக மிக மிக உயர...

எவரால் முடியும் இப்படிப் பாட?

வணங்கா முடியில், அரசவையில் கன்னத்தில் அறை வாங்கியவுடன் சிவாஜி பாடும் பாட்டு, "ஓங்காரமாய் விளங்கும் நாதம்...'' என்று, சிலிர்த்து எழுந்து பாடும் பாட்டு.

அதே படத்தில் "மோகனப் புன்கை வீசிடும் நிலவே...'' என்ற காதல் பாட்டு. சுசீலாவுடன் இணைந்து, குரலை மென்மையாக்கி, எப்படிப் பாடுகிறார்!

அக் காலத்தில் தனித்தனியாக 'டிராக்குகளை' ஒலிப்பதிவு செய்து, பின்னர் இணைக்கும் தொழில்நுட்ப வசதிகள் இல்லை. ஒரு பாட்டு ஒலிப்பதிவு ஆவதற்கு இரண்டு நாள்கள் கூட ஆகும். முதலில் பாடல்களை ஒலிப்பதிவு செய்தபின்னரே அந்தப் பாடலுக்குரிய காட்சியை எடுப்பார்கள். ரி. எம். சௌந்தரராஜன், பாடுவதற்கு முன்னால் கதையையும் பாடல் வரும் சூழலையும் கேட்டு அறிந்துகொண்டு, அந்தக் காட்சியில் நடிக்கும் நடிகர் எப்படி நடிப்பார் என்று கற்பனை செய்து, அதற்கு ஏற்ப பாடுவார்.

சொல்லப்போனால், அவர் பாடியதற்கு ஏற்ப சிவாஜி நடித்தாகவேண்டும். சிவாஜி நடிப்பில் காட்டும் உணர்வுகள், பாவங்கள் பாட்டில் கொப்பளிக்கும்.




90ஆவது பிறந்த நாள் விழா - பி. சுசீலா, எம். எஸ். விஸ்வநாதன்

''நான் ஆணையிட்டால்...'' என்ற 'எங்க வீட்டுப் பிள்ளை' படப் பாடலைக் கேட்டாலே, கையை வீசி உயர்த்தி, எம். ஜி. ஆர். பாடுவதுதான் கண்முன்னே தோன்றும்.

கோபம் கொப்பளிக்க வேண்டுமா? "யாரை நம்பி நான் பொறந்தேன் போங்கடா போங்க...'' என்ற பாடல்.

அன்பான கணவன், மனைவிக்கிடையே நிலவும் காதல் உணர்வைக் காட்டுவதற்கு, ''நான் பேச நினைப்பதெல்லாம்...'' என்ற பாட்டு.

மரணத்தைப் பற்றி பேசும்போது, "போனால் போகட்டும் போடா...'' என்ற விரக்திப் பாட்டு என்று, ஒவ்வொரு பாட்டுக்கும், மாறுபட்ட உணர்வைக் காண்பித்துப் பாடுவார்.

கண்ணதாசனின் பாடல் வரிகளைத் தெளிவாக உச்சரித்தவர் இவரைப்போல எவரும் இல்லை எனலாம்.

"ங் கா...'' என்று, கோணங்கித்தனமாக தொடங்கி, போட்டியில் இசை வல்லவனை ஓடவைத்த "பாட்டும் நானே பாவமும் நானே...'' என்ற 'திருவிளையாடல்' பாடலை மறக்கமுடியுமா?

"சிந்தனை செய் மனமே...'' என்று அமைதி தவழ பாடும்போது, முருக பக்தியில் திளைக்காத உள்ளம் ஏதும் இருக்குமா?

சிவாஜி இரட்டை வேடங்களில் நடித்தால், ஒவ்வொரு வேடத்துக்கும் தனியான, மாறுபட்ட குரலில் பாடுவார். 'உத்தம புத்திரன்' படத்தில் "முல்லை மலர் மேலே...'', "அன்பே அமுதே அருங்கனியே...'' என்று பாடும்போது ஒரு பாவம்; "ஹ! யாரடி நீ மோகினி...'' என்று பாடும்போது முற்றிலுமாக மாறுபட்ட உல்லாசக் குரல்; அவரால் மட்டுமே இது முடிந்தது.

அது, திராவிட முன்னேற்ற கழகம் வளர்ந்துகொண்டிருந்த காலம். "அச்சம் என்பது மடமையடா; அஞ்சாமை திராவிடர் உடமையடா...'' என்ற, இன மான உணர்வுப் பாட்டு, பிரச்சார பீரங்கியாக ஒலிக்காத இடம் இல்லை.

"மலர்ந்தும் மலராத பாதி மலர்போல...'' என்ற 'பாச மலர்' பாட்டில், பாச உணர்வை மறக்கமுடியுமா?

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்...'', "நினைத்ததை முடிப்பவன் நான் நான்...''; இவை, எம். ஜி. ஆரே நேரில் பாடுவதுபோலத்தானே மக்கள் உணர்ந்தார்கள்.

யாழ்ப்பாணம் வீரமணி ஐயரின் "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்...'' ஒலிக்காத கோவில் உண்டா?

"கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனை மறவேன்...'' என்ற, வாலியின் பாட்டுக்கு உயிரூட்டியது அவர் குரலல்லவா!

"உன் கண்ணில் நீர் வடிந்தால்...'' பாட்டின் சோக உணர்வு கேட்போரைப் பிணிக்கவில்லையா?

"தரைமேல் பிறக்கவைத்தான்...'' என்ற வாலியின் பாடல், "சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா...'' என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல் எல்லாம் உயிரோட்டம் பெற்றது இவர் குரலால்தான்.

இளையராஜாவின் வருகைக்குப் பின்னர் அவர் அதிகம் பாடவில்லை. இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஒரு காரணம்; கூடவே, மக்களின் ரசனையும் மாறிவிட்டது.

இன்று, எத்தனையோ பாடகர்கள்; பாட்டைக் கேட்டவுடனேயே பாடுபவர் யார் என்று கூறிவிடமுடியுமா?

இந்த தனித்துவம்தான் சௌந்தரராஜனின் பெருமை.

"உள்ளம் உருகுதையா...'' என்ற பக்திப் பாடலில், 'பாடிப் பரவசமாய் உன்னையே பாடிடத் தோன்றுதையா' என்பார். இவர் பாட்டைக் கேட்கும்போது பரவசம்தான் ஏற்படுகிறது.

பாடித் திரிந்த குயில் பறந்துவிட்டது; பாடல்கள் காலமெல்லாம் நிலைக்கின்றன. ■


Kumaran Silks
since 1955
PANAGAL PARK, CHENNAI - 17
TAMILNADU, INDIA.
www.kumaransilks.net
CUSTOMER CARE
(044) 4222 0077
2,Nageswaran Road,Panagal Park,T.Nagar,Chennai-17.Ph:(044)-24343544 / 3727 / 3757.



# ஒரு விதியை மீற இன்னொரு விதி

- மூன்றுபேர் மூன்று காதல்
- எதிர் நீச்சல்
- சூது கவ்வும்

– மூன்று திரைப்படங்கள்

கவித்துவமான காதல் கதைகளை வழங்கிய இயக்குநர் வஸந்தின் 'மூன்று பேர் மூன்று காதல்', ரசிகர்களின் எதிர்பார்ப்பை பெற்றிருந்தது. யுவன் சங்கர் ராஜாவின் பாடல்கள் பரவலான ரசிகர்களைக் கவர்ந்திருந்தமை, இந்த எதிர்பார்ப்புக்கான முக்கிய காரணம்.

மலையும் மலை சார்ந்த பகுதியும்; கடலும் கடல் சார்ந்த பகுதியும்; நிலமும் நிலம்சார்ந்த பகுதியும் என, மூன்று நிலப் பரப்புகளில் நடக்கும் காதல்களைப் படம் பேசுகிறது.

மூன்று காதல்களில், ஊட்டியில் நடக்கும் விமலின் காதல்கதை சொல்லப்பட்டவிதம் ஆயாசம் கொள்ள வைக்கிறது. நகைச்சுவை என்ற பெயரில் எழுதபட்ட வசனங்கள், புன்னகையைக்கூட வரவழைக்கத் தவறுகின்றன. அதுவரை சராசரி இளைஞனாக இருப்பவர், சேவை மனப்பான்மையில் திளைத்த ஒரு ஜோடியின் கதையைக் கேட்டதனாலேயே, தான் மணக்கவிருக்கும் பெண்ணை அவளது முன்னாள் காதலனுடன் சேர்த்துவைக்கும் முதிர்ச்சியைப் பெறுவதை, ஏற்கும் விதத்தில் சொல்ல வஸந் தவறிவிட்டார்.


நாகர்கோவிலில் நடக்கும் சேரன் - முக்தாபானு காதல் காட்சிகள், வாழ்வியல் சார்ந்த யதார்த்தமான பதிவுகள் காரணமாகவும், காதல் உணர்வை இயல்பாக வெளிப்படுத்தியதன் காரணமாகவும் கவனத்தை ஈர்க்கின்றன. முக்தாவின் தோற்றமும் நடிப்பும் இயல்பாக உள்ளன. சேரனின் நடிப்பும் வசன உச்சரிப்பும் ஓரளவு செம்மைபடுத்தப்பட்டிருப்பது பெரிய ஆறுதல். சிறைக் கைதிகளின் வளமான மறுவாழ்வுக்கான பணிகளில் ஈடுபடுபவராக சேரனைக் காட்டியிருப்பதில் உள்ள புதுமையை பாராட்டலாம். அந்தப் பணியில் தன்னை முழுதாக அர்பணித்துக் கொண்டு, அவர் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று சொல்வதையும் ஏற்றுக்கொள்ளமுடிகிறது. ஆனால், எச்சில் உமிழ்ந்து அவமானப்படுத்துவதை புன்னகையுடன் சகித்துக் கொள்ளும் முதிர்ச்சிபெற்ற சேரன், முக்தாவின் காதலை கடைசிவரை புரிந்துகொள்ளாமல் இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த இடத்திலும் நம்பகத்தன்மையுடன் திருப்பத்தை அமைக்க இயக்குநர் தவறுகிறார்.



எதிர் நீச்சல்




சூது கவ்வும்



சென்னையில் நடக்கும் அர்ஜுன் - சுர்வீன் காதல் காட்சிகள் நன்கு கையாளப்பட்டிருக்கின்றன. காதலின் பரவசம் இப்பகுதியில் நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சுர்வீனின் நீச்சல் பயிற்சியாளரான அர்ஜுன், அவரை ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற வைக்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். காதலன் - காதலி உறவையும், குரு - சிஷ்ய உறவையும் கலந்து குழப்பிக் கொள்ளாமல் கையாளும் முதிர்ச்சியை வஸந் நம்பகத்தன்மையுடன் காட்சிப்படுத்தியுள்ளார். காதல் காட்சிகளில் கொப்பளிக்கும் குழந்தைத்தனத்தை நிஜக் காதலர்களுக்குள் சில நேரங்களில் வெளிப்படும் குழந்தைத் தனமாக அவதானிக்கமுடிகிறது. கொடுப்பதுதான் காதல், எடுப்பது அல்ல என்ற மேன்மையான செய்தியுடன் இந்தக் காதல் நிறைவடைகிறது.

மூன்று கதைகளுக்கும் என்ன

தொடர்பு என்பதை விளக்க இயக்குநர் எடுத்துக்கொள்ளும் முயற்சி பரிதாபமாக உள்ளது. இந்த இணைப்பு வலுவானதாக இருந்திருந்தால், ஒரு நல்ல படம் பார்த்த திருப்தி கிடைத்திருக்கும். ஒளிப்பதிவும் இசையும் சிறப்பாக இருக்கின்றன. 'காதல் எந்தன் காதல்...' பாடல் நான்கு தடவைகளில் ஒலித்தாலும் சலிப்பை ஏற்படுத்தவில்லை.

தனுஷ் தயாரிப்பில், சிவ கார்த்திகேயன் - ப்ரியா ஆனந் நடித்து வெளியாகியிருக்கும் 'எதிர்நீச்சல்' வெளியாகுமுன்னரே 'கொலவெறி' புகழ் அநிருந்தின் இசையில், பாடல்கள் பட்டையைக் கிளப்பிக்கொண்டிருந்தன.

சிவகார்த்திகேயன் பிறந்ததும், குஞ்சிதபாதம் என்ற குலதெய்வத்தின் பெயரைவைத்துவிட்டு, இறந்துவிடுகிறார் அவரது தந்தை. அந்தப் பெயரை 'குஞ்சு' என்று சுருக்கி அனைவரும் அழைப்பதால் அவமானப்படுகிறார்; பெயரை மாற்றிக்கொள்ள நினைக்கிறார். அம்மாவின் உயிருக்கு ஆபத்து வரவே அந்த முடிவைக் கைவிடுகிறார். சில ஆண்டுகளுக்குப் பின்.(நாயகன் பெயரை மாற்றுவதற்கான நேரம் வந்துவிட்டதால்) அம்மா இறக்கிறார். குஞ்சிதபாதம் ஹரீசாக மாறுகிறார். இதற்கிடையில் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் காதல்; ஒரு பாடல்; பின்னர் பெயரைக் காரணம் காட்டி, அந்தப் பெண் அவனை விட்டு விலகுவது ஆகிய புதுமைகள் வேறு. படத்தின் முதல் அரை மணிநேரம் இந்தப் பெயர் மாற்று புராணத்துக்கு வீணடிக்கப்பட்டிருக்கிறது.

பெயர் மாற்றிய பின்னர், பள்ளி ஆசிரியையின் (ப்ரியா ஆனந்) அறிமுகமும் காதலும் சித்திக்கின்றன. காதல் காட்சிகள் பரவாயில்லை. ஆனால், உடல் பருமனை வைத்துச் செய்யப்படும் கேலிகள் கொடூரமாக இருக்கின்றன.

சிவகார்த்திகேயனின் நண்பராக சதீஷின் நகைச்சுவை படத்தை நகர்த்த உதவுகிறது. சிவகார்த்திகேயனின் உண்மையான பெயரை அறியும் ப்ரியா ஆனந், அவரது பெயருக்கு கௌரவம் சேர்க்கும்வகையில் ஏதாவது சாதிக்கச் சொல்கிறார். நாயகியின் அறிவுரையை நாயகன் மறுக்க முடியுமா? உடனடியாக சென்னை மரதன் ஓட்டப் பந்தயத் தில் பங்கேற்க முடிவெடுக்கிறார். அவர் ஓர் ஓட்டப்பந்தய வீரர் என்பதை ஆரம்பக் காட்சிகளில் பதிவுசெய்துவிடுகிறார்கள். தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றிபெற்று, பணக்காரர்களின் சதியால் பாலின சோதனையில் தோல்வியடைந்து, பதக்கம் பறிக்கப்பட்ட நந்திதாவிடம் ('அட்டகத்தி' படத்தின் நாயகி) பயிற்சிபெறுகிறார். வெற்றிபெற்று, நந்திதாவின் புகழை உலகுக்கு உரைக்கிறார். மீண்டும் முறையான பாலின சோதனை நடாத்தப்பட்டு, இழந்த புகழ் மீண்டும் நந்திதாவுக்கு கிடைக்கிறது.

பாலின சோதனையில் தோல்வியுற்று பதக்கம் பறிக்கப்பட்ட ஓட்டப் பந்தய வீராங்கனை காயத்ரியின் உண்மைக் கதையை மையமாகவைத்து திரைப்படம் எடுக்க நினைத்திருக்கிறார்கள். ஆனால், அந்தக் கதையின் சோகத்தை படம் பிரதிபலிக்கத் தவறுகிறது. இந்தச் சதி தொடர்பான காட்சி எதிலும் புதுமை இல்லை. இதே அணுகுமுறை படம் முழுவதும் விரவிக்கிடக்கிறது.

சில பாடல்கள் ரசிக்க வைக்கின்றன. பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட தனுஷ் - நயன்தாரா குத்தாட்டப் பாடலில் இருவரின் நடனமும் சிறப்பாக இருக்கிறது. சிவகார்த்திகேயன், வெகுஜன சினிமா நாயகனுக்கான தகுதிகளை வளர்த்துக்கொண்டுவருவதை கவனிக்கமுடிகிறது.

'எதிர்நீச்சல்' மாறுபட்ட சிந்தனையோ, புதுமைக்கான வேட்கையோ துளிக்கூட இல்லாத, சராசரி பொழுதுபோக்குப் படம்.

திரைப்பட இயக்குநராக மாறும் குறும்பட இயக்குநர்கள் வரிசையில் நளன் குமரசாமியும் சேர்ந்திருக்கிறார். 'சூது கவ்வும்', அவரது மாறுபட்ட படமாக வெளிவந்திருக்கிறது.

நரைத்த தாடியுடன் தோன்றும் விஜய் சேதுபதி ஆள் கடத்தல் தொழிலில் ஈடுபட்டாலும், அதற்கென்று சில கொள்கைகளை வகுத்துவைத்திருப்பவர். கடத்தப்பட்டவரின் குடும்பச் சூழலை உணர்ந்து பணம் கேட்பது; கடத்தப்பட்டவருக்கு 'டிப்ஸ்' வழங்குவது; தேவைப்பட்டால் கடத்தப்பட்டவரை பணம் வேண்டாம் என்று விட்டுவிடுவது என்று, 'ரொம்ப நல்லவராக' வலம்வருகிறார். வேலையிழந்த மூன்று இளைஞர்கள் மதுபானக் கடை ஒன்றில் அறிமுகமாகி அவருடன் இணைகிறார்கள். நேர்மையான அமைச்சரான எம். எஸ். பாஸ்கரின் மகனைக் கடத்தும் வாய்ப்பு வருகிறது. தன் கொள்கைக்கு எதிரானது என்று அந்த வாய்ப்பை விஜய் சேதுபதி முதலில் மறுக்கிறார். கூட்டாளிகளின் வற்புறுத்தலின்பேரில் பின்னர் சம்மதிக்கிறார். கடத்தப்பட்ட அமைச்சரின் மகன் இவர்களிடமிருந்து பணத்தைச் சுருட்டிக்கொண்டு தப்பித்துவிடுகிறான். 'என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்' யோக் ஜபியிடம் அமைச்சரின் மகனைத் தேடும் பணி ஒப்படைக்கப்படுகிறது. தவறு செய்தவர் என்று முடிவு கட்டிவிட்டால், துளிகூட ஈரமில்லாமல் கொன்றுவிடும் யோக் ஜபியிடமிருந்து விஜய் சேதுபதியும் சகாக்களும் தப்பித்தார்களா என்பது மீதிக் கதை.

வாழ்வின் அபத்தங்கள் எள்ளல் தொனியில் சித்தரிக்கப்படுகின்றன.

சொந்த ஊரில் நயன்தாராவுக்குக் கோவில் கட்டும் இளைஞன், எந்த இலக்கும் இல்லாமல் சென்னைக்கு வருகிறான். இலக்கில்லாமல் சென்னைக்கு வந்தவர்கள்தான் பெரிய வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்று அவனது நண்பன் பாராட்டுகிறான்.

கடத்தலில் முதல் கொள்கையை மீற வற்புறுத்தும் போது, 'அதுதான் ஐந்தாவது கொள்கை இருக்கிறதே, அதை வைத்துத் தப்பித்துவிடலாம்' என்கிறார்கள். ஒரு விதியை மீற இன்னொரு விதியே துணைநிற்கும் அபத்தத்தை காட்டும் காட்சி இது.

நேர்மையாக இருப்பது கேலிக்குரியதாகவும், பொதுச் சொத்தை அபகரிப்பது சாதாரணமானதாகவும் மாறிவிட்ட யதார்த்தத்தை, அழுத்தமான காட்சிகள் மற்றும் நகைச்சுவை ததும்பும் வசனங்கள் மூலம் பதிவுசெய்திருக்கிறார் நளன் குமரசாமி. நேர்மையாக இருப்பவர்கள், அதையே ஒரு விளம்பர உத்தியாகப் பயன்படுத்துவதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்டை நாயகன்போல் காட்டி, கடைசியில் ஒரு கோமாளியாக்கியிருக்கும் விதம் ரசிக்கவைக்கிறது.

சந்தோஷ் நாராயணின் பாடல்களும் பின்னணி இசையும் படத்துக்கு பக்கபலமாக அமைந்திருக்கின்றன.

விஜய் சேதுபதி, படத்துக்குப் படம் தன் தரத்தை உயர்த்திச் செல்கிறார். கடைசிவரை ஒரு வசனம்கூட பேசாமல், செய்கைகளாலேயே அசத்திச் செல்லும் யோக் ஜபிக்கும் அப் பாத்திரப் படைப்புக்கும் மனதார சபாஷ் சொல்லலாம்.

தமிழ் சினிமாவில் வித்தியாசமான சலனங்கள் சாத்தியம் என்பதைக் காட்டியிருக்கும் மற்றொரு படமாக 'சூது கவ்வும்' வெளியாகியிருக்கிறது.

**- கிருஷ்ணா**

# MARUTHI
## CASH & CARRY

குறைவான விலையில்
நிறைவான பொருள்கள்

15-17 Queensbury Station Parade
Queensbury
Edgware HA8 5NR

**Tel: 020-8952 6655**

## மாருதி எக்ஸ்பிரஸ்

Priority for Quality & Taste

தரமானவை
சுவையானவை



உங்கள் வைபவங்களுக்குத்
தேவையான
அனைத்து
சிற்றுண்டி, உணவு வகைகள்

## Maruthi Express
Take away & Catering

14 Queensbury Station Parade, Queensbury, Edgware HA8 5NR

**Tel: 020-3302 4824**

LOW COST WORLDWIDE AIR TRAVEL THAT GOES THE EXTRA MILE

# TIME TRAVEL

BEST PRICE 100% GUARANTEED

www.timetraveluk.com - Your Number 1 choice for worldwide air travel at unbeatable prices

**Harrow**
020 8429 8333

**Kingsbury**
020 8621 6793

## Colombo

Complimentary VISA Services with flights to Colombo

IATA · ATOL 10538 PROTECTED

Emirates
WORLDWIDE
**SALE!**
LIMITED TICKETS AVAILABLE

| | |
|---|---|
| SriLankan Airlines fr £325 + taxes | Oman Air fr £310 + taxes |
| Etihad Airways fr £196 + taxes | Jet Airways fr £185 + taxes |
| Qatar Airways fr £256 + taxes | Royal Jordanian fr £250 + taxes |

LOW SEASON FARES EXCLUDE TAXES AND ARE SUBJECT TO AVAILABILITY. CALL US TO FIND OUT MORE. TERMS & CONDITIONS APPLY


## WORLDWIDE TRAVEL SPECIAL FARES

PRICE MATCH GUARANTEE!


CHENNAI
fr £145 + taxes


BANGKOK
fr £164 + taxes


TORONTO
fr £142 + taxes


DUBAI
fr £90 + taxes


SYDNEY
fr £391 + taxes


KUALA LUMPUR
fr £163 + taxes

## Hotels in Colombo

Hilton · Holiday Inn · TAJ Hotels Resorts and Palaces · Cinnamon LAKESIDE COLOMBO

**CALL US NOW**
FOR THE BEST RATES

020 8429 8025
020 8621 6793

*"Make Your Dream Home Come True"*



**PARAM GNANASWARAN**
REAL ESTATE BROKER
Direct: 416-230-1107

RESIDENTIAL, COMMERCIAL & INVESTMENTS

RIGHT AT HOME

**RIGHT AT HOME REALTY INC., BROKERAGE**

HOME OFFICE:
**401-7045 EDWARDS BLVD,**
**MISSISSAUGA, ONT.L5S 1X2**
**PH# 905-565-9200**

MAIN OFFICE:
**202 DON MILLS ROAD**
**TORONTO, ONT.M3C 1W3**
**PH# 416-391-3232**





# Lycamobile
Call the world for less

# Call Sri Lanka





Landline & Mobile

**5p /min**

when you buy

National Bundle just for £10 /30 Days

**250 UK Minutes**
**UNLIMITED**

Texts | Data | Lyca to Lyca

To buy: dial *139*11044# or text 11044 to 3535

For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Lycamobile National Bundle ("the offer") includes allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01, 02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Unlimited usage is subject to a fair usage of 3000 minutes/texts/MB per month per SIM. Usage in excess of your allowance will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Lycamobile's Special International rates for National Bundle customers offer ("the offer") is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with the £10, £20, £30 or £40 National Bundles (not the £5 bundle). Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), or if it is being used for tethering. Promotional period: the offer is valid from 1st June 2013 until 30th June 2013.

Lyca mobile
Call the world for less